غاية الاختصار

ஙாயத்துல் இக்திஸார் மாலை

காயல்பட்டணம்

காமில் ஒலி ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம்

அவர்களால் இயற்றப்பட்டது.

★

வெளியிடுவோர்:

ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லா(ஹ்)

கந்தூரிக் கமிட்டி

அப்பாபள்ளித் தெரு, காயல்பட்டணம்.

1953

விலை] [அணா 12

غاية الاختصار

ஙாயபத்துல் இக்திஸார் மாலை

காயல்பட்டணம்

காமில் ஒலி ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம்

அவர்களால் இயற்றப்பட்டது.

★

வெளியிடுவோர்:

ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லா(ஹ்)

கந்தூரிக் கமிட்டி

அப்பாபள்ளித் தெரு, காயல்பட்டணம்.

1953.

குறள் வெண்பா.

சன்மார்க்கத் தப்லீகில் ஸாமொலி போலெவரும்
நன்மார்க்கப் பெற்றிலை நம்பு.

கட்டளைக் கலிப்பா.

மன்னர் நபி யின்னுரை யேவலான்
மார்க்க நூன்முறை போலவே ஸாமொலி
சொன்ன பொன்மொழி மாலைக ளாயிரஞ்
சோதி ஞானமு ணர்ந்துந டந்தவர்
முன்ன வன்திருத் தூதர்மு ஹம்மது
முஸ்த பாநபி நாதர்மன் றட்டமும்
இன்ன மன்னவ ரின்பொருட் டாலொரு
இறைவன் தன்லிகா இன்பமு மேற்பரே.

நூன்முகம்.

அருமைச் சோதரீர்!

தற்கால மக்களின் ஞானமும், நடைமுறைப் போக்கும் இன்னம் சிலகாலம் சென்றால், விசனிக்கத்தக்கதாய் முடியுமென அஞ்சவேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், இக்கால ஆரம்பக் கல்வியும், நடைமுறைப் போக்கும் மார்க்கஅடிப்படையில் முதலாவதாக அறியவேண்டிய அவசியக் கடமைகளைக் கற்பிக்கவோ, அதன்படி நடப்பிக்கவோ முற்படவில்லை. இங்கு ஒரு சில (குர்ஆன்) ஓதிக்கொடுக்கும் பள்ளிகள் இருக்கின்றன. அதன் முன்னேற்றமுறையில் பிரமுகர்களின் கண்காணிப்போ, மக்களை அனுப்பி ஆதரிப்போ அரிது. சில பொதுஸ்தாபனங்களில் நல்ல முறையில் தக்க போதினர்களைக் கொண்டு அரபி மத்ரஸாக்கள் அமைத்து, நல்ல ஆதரிப்புடன் மார்க்க நூன்முறைகளை சீரியமுறையில் கற்பிக்கப் படுகின்றன. அதில் உள்ளூர் செல்வப் பிரமுகர்கள் வாக்கும், மனமுமொற்று ஒன்றுபட்ட ஒத்துழைப்பும்,

தங்கள் மக்களேயும், பிறரையும் அதில் அனுப்பிப் படிக்கவும், அவர்களே ஊக்கமளித்து உற்சாகப்படுத்தவும் முன்வராதிருப்பது விசனகரமானதாகும். இன்னமிரு ஆண் மானேஜிங் ஸ்கூல்களும், ஒரு போர்டு ஸ்கூலும், நான்கு பெண் பாடசாலேகளும் இருக்கின்றன. இவைகளில் ஒருவாறு உற்சாகக் கண்காணிப்பு நடந்துவருகின்றன. அதன் போதனுமுறையை படிக்கும் மக்களின் ஒழுக்க நடையின்மையால் வெறுக்கத்தக்கதா யிருக்கின்றன. அதை பொறுப்புள்ளவர்கள் கவனித்து, சீர்படுத்துவார்களாக. இன்னும் பல மார்க்க முரண்பாடுகள் தலேவிரித்தாடுகின்றன.

இதற்கெல்லாம் காரணம், நம் முன்னோர்களால் செய்துவந்த **மார்க்க தப்லீங் பிரச்சாரத்தைக்** கைவிடப் பட்டிருந்ததே. ஆகையால், இப்போது அத்தகைய **தப்லீங்** அவசியத்திலும் அவசியம் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. அத்தகைய மார்க்க தப்லீஙில் அவசியம் போதிக்கவேண்டிய அருமையான நூற்களே **தமிழில்** யாரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய முறையில் எளிய நடையில் **மாலேகளாக** இற்றைக்கு மூந்நூறு வருஷங்களுக்கு முன்னமே நம்மூர் கல்விக்கடல் **ஸாம்ஷிஹாபுத்தீன் ஒலிநாயகம்** அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏவியபடி இயற்றியுள்ளார்கள். **மார்க்கத் தப்லீநுக்கு அவைபோன்று கிடைப்பதரிது.** அதையே இக்காலத்திற்கு அவசிய **தப்லீங்** என்பதை ஈமானுள்ள ஒவ்வொருவரும் கவனித்து, தெருத்தெருவாய் **"ஸாமொலி மாலே—தப்லீங்சாலே"** எனும் பெயரால் போதனுசாலேகளே இயற்றும் பிரச்சாரத்தில் முந்திக் கொள்வார்களாக அவ்வரிய மாலேகளில் வருஷாவருஷமும் சிலதைப் பிரசுரித்து அடக்கவிலேக்குக் கொடுப்பதெனத் துணிந்துள்ளதுபோன்று, இவ்வருஷமும் நம்மில் ஒவ்வொரு ஆண், பெண்ணிற்கும் **அமல் செய்ய, அறிய வேண்டிய 'அஹ்க்காம்களே'**(சட்டதிட்டங்களே)பொதிந்த

"ஙாயத்துல் இக்திஸார்" என்னும் உயரிய அரபு கிதாபை தமிழ் மொழிபெயர்ப்பு மாலையாகவுள்ளதை அச்சிட்டுள்ளோம். அது ஒவ்வொரு முஸ்லிமின் கையிலும் அவசியம் இருக்கவேண்டியதென்பதை வற்புறுத்தி வேண்டிக்கொள்கிறோம். அதுகொண்டு இறைவன் உங்களுக்கும், எங்களுக்கும் இருலோக வாழ்வை ஈந்தருள்வானாக. ஆமீன்.

எங்கள் கமிட்டியாருடன் இடைவிடாது ஒத்துழைத்து, ஊக்கமளித்து, உதவிபுரியுமாறு வேண்டுகிறோம். அஸ்ஸலாமு அலைக்கும்.

இங்ஙனம்

'ஸாம்ஒலி மாலை-தப்லீங்சாலை' கந்தூரிக் கமிட்டியார் அப்பா பள்ளி காயல்பட்டணம்.
பா. சு. முஹம்மதப்துல்லா லெப்பை.
நஹ்வி செ. யி. முஹம்மதிஸ்மாயீல்.
மா. மு. க. முஹ்யித்தீன் தம்பி.

P.S. முஹம்மது சுலைமான் லெ
தாருஸ்ஸலாம்
தைக்காத் தெரு
காயல்பட்டணம்

P. S. முகம்மது சுலைமான் கை

بسم الله الرحمن الرحيم

غநாயத்துல் இக்ஃதிஸார் மாலை

(1) உலகமடங்கலும் படைத்தாள்கின்ற
உடையோன் புகழ்கொண்டும் ஒருநபிதன்
நலமாம் ஸலாம் ஸலவாத்துக்கொண்டும்
நல்ல அஸ்ஹாபிமாருடைய.

(2) பெலமாம் துஆப்பேறு தன்னைக் கொண்டும்
பீராம் ஒலிமார்கள் தாளை யெந்தன்
தலைமேலிருத்திக் கொண்டிதனைச் செப்ப
தக்க பெரியோனே துணைச்செய்வாயே.

(3) அவ்வல் இமாம் அபூ ஹனீபாதாளும்
அண்ணல் இமாம் மாலிக் கவர்தன்தாளும்
செவ்வாயுரைபேசும் இமாம் ஷாபியீ
சீர்பாதம் ரண்டும் இமாம் அஹ்மத்.

(4) [1]எவ்வும் வணக்கத்தில் தரித்து நிற்கும்
இரண்டு மலர்த்தாளென் தலைமேல் வைத்து
[2]கவ்வு துலங்கிட வேயுதித்த
'ஙாயத்துக் திஸாரு'ரைக்குகிறேன்.

(5) 'ஙாயத்துக் திஸாரெ'னும் கிதாபில்
கருணையுள காழி அபூஷுஜாஉ
தூயபடிதஸ் னீபு[3] செய்தார்
சுருக்கம்தனில் தேர்ந்த கிதாபதாகும்.

(6) நாயன் உபயத்தால் சிற்றடியேன்
நலமாயதைத் தமிழ் வுரைப்படுத்தி
ஆயும் அறிவோர்கள் ஏற்றுக்கொள்ள
ஆதிபெரியோனே யுதவி செய்வாய்.

---

1 தனித்து   2 பெருமை   3 கோர்வை

(7) சங்கையுள உழு துடக்கறுக்க [தண்ணீரின் பாடம்]
தண்மையுள நஜீஸதனை நீக்க
புங்கமுள நீரைப் பேசுகிறேன்
போற்றலுள ஷுஜாஃ சொன்ன பாங்கில்.

(8) வானீர் கடலாறு கேணி பனி
மழைக்கட்டிக் கூவ லிவைகள் சேர
ஈனில்லாதநீ ரென்றே யிமாம்
ஏற்றமுள நாயா தன்னில் சொன்னார்.

(9) குல்லத்தை னீரில் விழுந்தால் நஜீஸ்
குணமாயது நஜீஸாகாதென
வல்ல ஏதாலும் பேதலித்தால்
வடுவானநஜீ ஸாகு மென்றார்.

(10) பரிமாறப்பட்ட புனலாவது
பகரமுள துய்மையாகு மென்றும்
கருதியது கொண்டு துடக்கறுக்க
கழுக நஜீஸையும் ஆகாதென்றார்.

(11) களிம்பூறும் கிண்ணி தனிலிருந்து
கதிரோன் தனைக்கொண்டு காய்ந்த தண்ணீர்
இழிவான மக்றூஹாமென
இயம்பினார் காழி அபூஷுஜாஉ.

(12) நாய்த்தோல் பன்றித்தோ லிரண்டுமன்றி [தோல் ஊறப் போடும் பாடம்]
நாயனருட் படிசெத்ததின் தோல்
தூயபடி யூறப்போட்டா லது
துய்மையென 'நாயத்'துடையோர் சொன்னார்.

(13) செத்த மிருகத்தின் முடியென்புகள்
செத்த மனிதர் தன் ரோமமன்றி
வெற்றி யணுகாத நஜீஸெனவே
விளம்பினார்கிதா பிக்கிஸாரில்.

(14) வெள்ளிப் பாத்திரம் பொன் பாத்திரம்
விருப்பமுடன் வைத்து பரிமாறுதல்
தெள்ளிதாய் ஹறாமாகுமென
ஷெய்கு அபூஷுஜாஃவுரைக்கலுற்றார். { பாத்திரங்களின் பாடம்

(15) இந்தவிதமன்றியுள பாத்திரம்
எந்தப் படியாலும் பரிமாறுதல்
அந்தமுடனாகு மெனவுரைத்தார்
ஆலிம் இஸ்பஹா னீயென்பவர்.

(16) மிஸ்வாக்குச்செய்ய ஸுன்னத்தாகும்
மேலான நோன்பு பிடித்தோரெல்லாம்
குஷியாய் மிஸ்வாக்கு சாய்கைக்குப்பின்
குணமாகச்செய்ய மக்றூஹென்றார். { மிஸ்வாக்கு

(17) நித்திரை செய்து முழிக்கும்போதும்
நெறியாய்த் தொழுகைக்கென் றெழும்பும்போதும்
சக்தியுரை பேசும் வாய்ப்பேதகம்
தான் காண்கிலுமுஸ்த ஹப்புவென்றார்.

(18) சிறுநீர் பெருநீர்க்கிஸ் தின்ஜா செய்ய
சிறப்பாம் புனல்கொண்டும் கல்லுகொண்டும்
பறுலாமெனச் சொன்னார் அபூஷுஜாஉ
பகரமுள 'ஙாயத்துக் திஸாரி'ல்

(19) சிறுநீர்பெருநீருக் கிருக்கும் போதும்
சிறப்பாம் கிப்லாக்கும் பொழுதோட்டுக்கும்
மறையும் திரையன்றி முன்பின் காட்ட
வாகா யிவையாகா தெனவுரைத்தார்.

(20) பழுத்த மரத்தின்கீழ் நிழலில் தரி
பட்ட 1அறலில்பா தை வழியில்
அழுத்த மனுகாத செயலிரண்டும்
ஆகாதெனச் சொன்னார் அபூஷுஜாஉ.

---

1 தண்ணீர்

(21) நிய்யத்தும் முகம் கழுகுதலும்
நீண்டவிருகையும் முளங்கையுடன்
துய்யபடி நன்றாய்க் கழுகுதலும்
சிறுகத் தலைமஸ் ஹூம்இருதாள்.

{ உழூவுடைய பர்லு

(22) ஐயமறவிரு பரண்டையுடன்
அழகாய்க் கழுவலும் அடவொழுங்கும்
செய்யவிவை யாறும் உழூவிலுள்ள
சிறப்பாம் பற்ளென்றார் அஹ்மதென்போர்.

(23) ஆகாவிருதுளை தன்னில் நின்றும்
அற்பம் வெளியானால் மணியன்றியே
வாகாய் முறிந்திடும் உழூவின் துய்மை
மதிபோகிலும் உழூ முறியுமென்றார்.

{ உழூ முறித்தல்

(24) சமைந்த விருப்பன்றியுறங்கினாலும்
தையல்தனில் கொள்ள ஆகும் பெண்ணை
அமைத்த மறைவன்றி தொட்டதாலும்
அபத்தை கரத்துள்ளாய் தொடுகிலுமே.

(25) மூன்று பற்ழுண்டும் முழுக்கிலென
மொழிந்தாரிமாம் நிய்யத்ததின் பிறகு
தீண்டா நஜீஸான தை நீக்கலும்
சேரவுடலெங்கும் நனைப்பதுமே.

{ குழியின் பர்லுகள்

(26) இன்பமாய் மனி வெளிப்பட்டாலும்
எதிர்த்தாலுமிரு கத்னா வரை
துன்பமவுத்தாலும் [1]நிபாஸினாலும்
துடக்காம்ஹைலாலும் முழுக்குண்டாமே.

{ முழுக்கின் காரணங்கள்

(27) சோரியெனும் ரத்தமில்லாமலே
துய்தாகப் பிள்ளைப் பெறுகிலுமாம்
சீராயவளுக்கு விதியெனவே
செப்பினார் ஞாயத்துக்திஸாரில்.

---

1 பிள்ளைத்துடக்கு

(28) வெள்ளிமுழுக்கிரு பெருநாட்குளி
1விசிறு மழை தேடி முழுவுதலும்
தெள்ளிதாம் திங்கள்தனிலல்லது
சிறப்பாம் சூரியன்தனி லாகுதல்.

{ ஸுன்னத்தான குளி.

(29) ஒள்ளிதாயொளி மங்கலிலும்
உகப்பாய்க் குளிப்பது சுன்னத்தென்றார்
பள்ளி கப்றறை யமைகின்றோனை
பரிவாய்க் குளிப்பாட்டி முழுகலுமே.

(30) காபிரானவன் இஸ்லாமுக்கு
கருத்தாக வந்தால் முழுகிறதும்
கோபமணுகாத குழந்தைப்பிள்ளை
குளிக்க சுன்னத்தாம் பாலிகானால்

(31) புத்தியிழந்தவன் தனைமறந்தோன்
போத மணுகினால் குளிக்கிறதும்
வெற்றியுள இஹ்றாம் முழுக்கும்
மேலான மக்கம் புகுதும்போதும்.

(32) சுத்தியுடன் நன்றாய் குளிக்கிறதும்
துய்ய அறபாவில் தரிக்கும்போதும்
பத்திபெற நன்றாய் குளிப்பதுவும்
பரிவான சுன்னத்தாகுமென்றார்.

(33) தவாபுசெய நன்றாய் முழுகுதலும்
சங்கை நபியுல்லாஹ் மதீனம்தன்னில்
தவாபு பெறப்புகும் போதும் நன்றாய்
தருமாய்க் குளிக்கவும் ஸுன்னத்தென்றார்.

(34) வசைகேடாளிக்கும் ஸபராளிக்கும்
மண்கொண்டு நன்றாய் தயம்முமும் செய்ய
பிசகன்றி யாகும் வக்திலென
பேசினார் இமாம் அபூஷுஜாஉ.

{ தயம்மும் உடைய பாடம்.

---

1 வீசி

(35) தயம்மம் தனிலுள்ள பர்ளாவது
சங்கை நிய்யத்தும் முகம்மஸ்ஹும்
உயர்ந்த விருகையும் முழங்கையுடன்
உருவித்துடைப்பதும் தற்தீபுமாம்.

(36) உழூவை முறித்திடும் கருமத்தாலும்
[1]'உதகம்' பெறுகிலும் ஸலாத்திலன்றி
பெலமாம் இஸ்லாமை மாறுகிலும்
பிரியும் தயமமென் றார்காழியார்.

(37) ஷற்றின்படியே தயம்மம் செய்தால்
தகுமாக அந்த தயம்மம் கொண்டு
இருக்கும் ஒருபர்ளேயன்றியே
ஏற ஒரு பர்ளாகாதென்றார்.

(38) பர்ளையிருத்தபின் ஸுன்னத்துகள்
பரிவாய் மிகத் தொழவாகுமென்று
அறிவு மிகவுள்ள அபூஷுஜாஉ
அழகாம் கிதாபினில் அருளிச்செய்தார்.

(39) அபத்தினால்வெளி யாகும் [2]'சோரி'
ஆறிலொருபாதி யுண்டது கேள்
ஸிபத்தாலறிஹை ளும் நிபாஸும்
சேர்ந்த பெரும்பாட்டி னுதிரமுமே.

{ ஹைளு, நிபாஸுடைய பாடம்

(40) நஷலன்றிவெளி யாகுமது
நாற்றமுளஹை ளென்றறியும்
பிசகன்றி யீனும் பிள்ளையின்பின்
பிறப்படும் சோரி நிபாஸதுவாம்.

(41) வசைகேடுகொண்ட போது வரும்
வசையானசோரி பெரும் பாடாகும்
பிசகன்றி யிந்த வகையறிய
பெண்ணாய்ப் பிறந்தோர்க்கு விதியாகுமே.

---

1 தண்ணீர் 2 இரத்தம்.

(42) வடுவாம் ஹைளினில் குறைந்தது கேள்
வாகாயொருஇர வும் பகலும்
[1]'மொடுவாய்' மிகுத்தது பதினைந்துநாள்
மோசப்படப்படு மென வுரைத்தார்.

(43) நிபாஸில் குறைந்தது கண்பொழுதாம்
நீண்டதறுபதாம் நடபடி கேள்
'கபா'வாகும்நாலு பத்து வென்று
காழி அபூஷுஜாஃ உரைக்கலுற்றார்.

(44) ரண்டு ஹைளுக்கு மிடையிலுள்ள
நலமாம் துய்மைக்கு குறைந்தது கேள்
வென்றியுளபத்தோ டைந்துநாளாம்
மிகுத்ததுக் கெல்கை யில்லையென்றார்.

(45) வரிசைத் தொழுகையும் நோன்புகளும்
வண்மைகுர்ஆனை யோதல் தொடல்
கருதியுடனதை சுமக்குதலும்
கருத்தாய் மஸ்ஜிதில் தரிக்குதலும்.

துடக்காளி செய்யத் தகாத கருமங்கள்

(46) தெரிவாம் கஃபாவை சுற்றுதலும்
சேர்க்கையும்முழந் தாள் மேல் தொப்புள்
இதர்க்குமிடைதனில் புரோஜனமும்
இழிவாம் ஹைளினில் ஹறாமாமென்றார்.

(47) ஜுனுபானோர்தொழ குர்ஆனைத
துய்யமுஸ்ஹபைத்தொடச் சுமக்க
கனமாம் கஃபாவை தவாபுசெய்ய
கருத்தால் மஸ்ஜிதில் புகுத ஹறாம்.

ஜுனுபானோர் செய்யக் கூடாதவை.

(48) [2]முஹ்திதெனும் உழூவில்லானுக்கு
மோசமறத் தொழுதவாபு செய்ய
வஹ்யாலிறங்கின முஸஹ்ஹபைத் தொட
உரத்தஹறாமென்று வுரைக்கலுற்றார்.

---

1 அதிகம் 2 துடக்காளி.

(49) மங்கைதங்களுக் குண்டாகிற
வயதில்குறைந்தது ஒன்பதாண்டாம்
திங்கள் கணக்கினு லென்றுரைத்தார்
ஷெய்குஅபூஷுஜாஃ அஹ்மதென்போர்

(50) சூலில்குறைந்தது ஆறுதிங்கள்
துலையிலுயர்ந்தது நால்வருஷம்
மேலில்நடைபடி யொன்பதென
மேலானஅபூ ஷுஜாஃவுரைத்தார்

(51) தண்மையிரு துளையாலுள்ளது
தாதுமணியன்றி நஜீஸதாகும்
வன்மையுடனதைக் கழுகிறது
வாஜிபெனச்சொன்னார் அஹ்மதென்போர்

{ நஜீசுடைய பாடம்

(52) பாலன்றி அன்னம் கொள்ளாத ஆண்
பாலன் சிறுநீரில் அறல் துளித்தல்
கோலம் பெறவது துய்மையென
கூறினார் கோஜா அபூஷுஜாஉ.

(53) சோரியொலித்தோடா [1]மைத்தினமும்
துய்மையணுகாத ரெத்தமூறில்
சீராய்க் குறைந்திருந் தால் பொறுக்க
செப்பமுடன்படு மெனவுரைத்தார்.

(54) [2]'என்பு' தனையன்றி ரோமமன்றி
இவையாலுளதன்றி யுயிர்வஸ்துகள்
தம்பமுடன் ஹயாத்திருக்கமட்டும்
சங்கையுள துய்மை யாகுமென்றார்.

(55) மீனன்றி கிளிதன்னையன்றி
மேலான இன்ஸான் இவை மூன்றன்றி
ஈனமுள செத்த வஸ்துவெல்லாம்
இணங்கா நஜீஸென்றார் இஸ்பஹானி.

---

1 மய்யித். 2 எலும்பு.

(56) பன்றி நாயினம் வாயிட்டதால்
பாத்திரம் தன்னை யேழுமுறை
வென்றியுள மண்ணா லதிலோர் முறை
விரைந்து கழுகிட விதியாமென்றார்.

(57) மற்ற வகையான நஜீஸுகளை
வாகாய் ஒருமுறை கழுகப்போதும்
வெற்றியனாகாக்கள் சிலுக்காவானால்
விருப்பமுளநல்ல துய்மையென்றார்.

(58) எல்லா அமலிலும் ஏற்றமான
இனிய தொழுகையின்மஸலா செப்ப
அல்லாஹ் உதவியால் கேட்டிருங்கள்
அவனிதனிலுள்ள மாந்தர்களே.

தொழுகை யுடைய பாடம்

(59) தொழுகைதனிலுள்ள பர்ளாம் தவம்
துய்யலுஹர் அஸர் மக்ரிபிஷா
தெளிவாய் வெழுத்தபின் தொழும் ஸுபுஹும்
துலங்குமிவை யைந்தும் பர்ளாமென்றார்.

(60) துய்யலுஹர்க் கவ்வல் வக்தாவது
துலங்கும் பொழுதுவான் மதியம் விட்டு
ஐயமறச்சாய்கை யாம் பிந்தின
ஆகிற்வக்தஸர் அவ்வலென்றார்.

(61) சாய்கை நிழல் நீங்கி வஸ்துநிழல்
சரியாயவ்வண்ணம் நீளுவது
வாகுபெற அஸற்அவ்வலாகும்
வண்மை அஸ்றாகிற் பொழுதுமட்டே.

(62) வரிசைமக்றிபின் வக்தாவது
வண்மையுள ஒரு வக்ததாகும்
கருதியறியது அஸ்தமானம்
கதிரோன்பொழுதுதான் அடையுமென்றார்.

(63) இஷாவின் தொழுகைக்கு அவ்வல்வக்த்
தியம்பக்கேளுசெம் மேகமது
பிசகின்றி நீங்கிமறைறவதென்றும்
பிரியாகிற் பஜ்றவ்வலென்றார்.

(64) ஏற்றமுளபஜ் றவ்வலொகுத்
தியம்பகேள்ரண்டாம் வெளுப்பு திப்பும்
மாற்றமுள ஆகிர்வக்தாவது
வன்மைப்பொழுதுதிப் பளவுமென்றார்.

(65) தொழுகை தனக்கு நல்ஷற்தாவது
துண்டாம் உறுப்பெல்லாம் துடக்கைவிட்டும்
இழிவுவகையான நஜீஸைவிட்டும்
ஏற்றமுளதுய்மை யாவதென்றார்.

(66) மெய்யாம் [1]மகானது நஜீஸை விட்டும்
மேன்மையுடன் துய்தா யிருப்பதுவும்
துய்யவஸ்துக்கொண் டப மறைத்தல்
துலக்கமுளஷருத்தாகுமென்றார்.

(67) நேரம் அறிவது கிப்லா தன்னை
நிஷமாக நெஞ்சால் முன்னோக்குதல்
சீராயிவையஞ்சும் தொழுகைதனை
சிறப்பாயெடுப்புக்கு ஷற்தாமென்றார்.

(68) அச்சமிகுந்ததால் ஸபரில் சுன்னத்
தழகாய்த் தொழுதாலும் வாகனத்தில்
இச்சையுளகிப் லாநோக்குதல்
இந்தவகை கொண்டுவிடலாமென்றார்.

(69) நிய்யத்தும் நிலை யும்முந்தின
நெறியாம் தக்பீறும் பாத்திஹாவும் { தொழுகையின் பர்ளுகள்
ஐயமறருகூஉம் தரிப்பும்
அழகாம் இஃதிதாலும் தரிப்பும்.

---

1 இடம்

(70) மெய்யாம் முன்ஸுன்னத்தும் தரிப்பும்
மீளும் இடையிருப் பும்தரிப்பும்
செய்யும் பர்ளினில் பனிரண்டாகும்
சேர்ந்த பர்ளேழுபகரக்கேளீர்.

(71) துய்யபடியதின் பின்ஸுன்னத்தும்
தரிப்பும் றக்அத்து ஒடுக்கமதில்
பையவிருந்தத்த ஹிய்யதோதல்
பாங்காய் ஸலாத்தோதல் பின்னும் கேளீர்.

(72) முன்பில் ஒரு ஸலாமோதுதலும்
மோசமறத்தொழும் தவத்தினின்றும்
அன்பால்பிறத்திப்பட் டெண்ணுவதும்
அழகாம் தற்தீபும் பர்ளாகுமே.

(73) நினைவாய்ப்பேசுதல் மிகச்செய்குதல்
நிஜமாய் உழூ நீங்கல் துடக்குண்டாகல்
கன திகேடான நஜீஸுண்டாகல்
காற்றன் றியபம் நீங்குதலும்.

(74) இனமாம் இஸ்லாமை மாறுதலும்
இலங்கும் கிப்லாவை மாறுதலும்
முறிவாம் [1]முறுவலும் ஊண்குடிப்பும்
மேலாம் கருத்தது பேதகமே.

(75) இந்தப்பதினொரு கருமங்கொண்டு
ஏற்றமுள ஸலாத்தெனும் தொழுகை
அந்தமுடன்முறிந் திடுமெனவே
ஆலிம் அபூஷுஜாஃ உரைக்கலுற்ருர்.

(76) பர்ளாம் தொழுகைக்கு நின்றுதொழ
பாங்கில்லாவிட்டால் இருந்துகொண்டு
சரியாய்த் தொழ விதி யேலாவிட்டால்
சீராய்க்கிடையினில் தொழலாமென்ருர்.

---

[1] சிரிப்பு.

(77) காரணமுள்ள தொழுகையன்றி
சருதித் தொழவறி ஐங் தொகுத்தில்
செல்லவதின் வகையைக் கேளீர்
ஸுப்ஹு தொழுதாகில் கிளம்பமட்டும்.

(78) கிளம்பினால் ஒரு வேலளவு
கிழக்கிலுயர் மட்டும் தொழவொண்ணாது
தொழும்பில்லாயில்லை மதியமானால்
சாய்கைவிழமட்டும் விலக்காமென்றார்.

(79) அஸறு தொழுதக்கால் அமையமட்டும்
அமைய அடுத்தக்கால் நிரப்பமாக
பிசகன்றி பொழுதமையமட்டும்
பேணித் தொழவொண்ணாதெனவுரைத்தார்.

(80) ஜமாஅத்துடன்கூடி தொழஸுன்னத்தாம்
சேராய் மஃமூம்கள் துணிந்துநின்றால்
நமாஜில் விதியாகும் அவர்கள் தன்னை
நாடுவதும் இமாம் மேல் ஸுன்னத்தாம்.

{ ஜமா அத்துத் தொழுகை

(81) நாட்டான்மகனையும் பயல்தனையும்
நலமானபாலி கானோரையும்
[1]வேட்டமணுகிய சிறியாரையும்
விருப்பமுடன் கூடித்தொழலாமென்றார்.

(82) ஆணாய்ப்பிறந்தவன் பெண்ணினத்தை
அழகாய்த்தொடரவு மாகாதென்றும்
வீணான வும்மீ தனையோதினோன்.
விரும்பித்தொடரவு மாகாதென்றார்.

(83) எந்தத்தலத்திலும் பள்ளிதன்னில்
இனியஇமாமுடன் தொழலாமென்றும்
அந்தமுள இமாம் தனக்கு முன்பில்
ஆகாதென மட்டும் என ஓதினார்.

---

1 பருவம்.

(84) பள்ளியுள்ளாகத் தொழும் இமாமை
பரிவாயடுத்திட ஏலாதிடில்
தெள்ளிதாயவர் ஓதல் செய்கை
தெரிந்தால் துயரலாம் பள்ளிபின்னே.

(85) நாலு றக்அத்து வுள நமாஜில்
நல்ல ஸபர்பதி ஞற்காதத்தில்
கோலம் பெற நன்ருய் சுருக்கித்தொழ
குணமாகஜாயி ஸாகு மென்ருர்.

{ கஸ்று ஜம்உ தொழுகை.

[86] ஊராளியான பேர்களுக்கு
ஊண்டி மழைபெய்தால் முன் னமாஜில்
சீராகக்கூடி ஜம்உ தொழ
செப்பமுள ஜாயிஸாகு மென்ருர்.

[87] ஸ¬ப்ஹன்றி மற்ற தொழுகை தன்னை
துய்தாகக்கூடி ஜம்உ தொழ
தவனமுளவிந்த ஸபராளிக்கு
ஷற்தின்படி ஜாயிஸாகுமென்ருர்.

[88] ஜ¬ம்ஆவிதியாக ஷற்தாவது
துய்ய இஸ்லாமும் புலூக்அக்லும்
செம்மையுள 1ஹ¬ர்ருயிருக்கிறதும்
சிறப்பாம் ஆண்மையும் ஸபர்விடலே.

{ ஜ¬ம்ஆவுடைய பாடம்

[89] வரிசையுள ஜ¬ம்ஆ தொழஷற்தாம்
2‘பலதி’ல்‘கர் 3யத்’தில் நாற்பதுபேர்
பரிசுபெற நன்ருய் லுஹறெருக்கில்
பாங்காய்த் தொழவிதி யாகு மென்ருர்.

[90] ஏற்றமுள ஜ¬ம்இல் பர்ளாவது
இரண்டு குத்பாவும் இடையிருப்பும்
போற்றலுளரண்டு ரக்அத்தாக
போய்ஜமாஅத்தாய் தொழவிதியாம்.

1 அடிமையில்லாதவன். 2 பட்டணம். 3 கிராமம்.

[91] குத்பாவுக்குள்ள பர்ளஞ்சுகேள்
குதாயைப் போற்றலும் நபிஸலாத்தும்
'இத்த குல்லாஹெ'ன் றுரைக்குதலும்
இரண்டு குத்பாவிலும் பர்ளாம்.

(92) ரண்டாலொரு குத் பாதனிலே
நலமாயொரு ஆயத் துரைக்குதலும்
வென்றியுள முஃமின் மூஸ்லிம்கட்கு
விரும்பி ஆகிறில் துஆவு மென்றார்.

(93) பெருநாள்தனில்ரண்டு றக்அத்தையும்
பேணித்தொழஸுன்னத் தாம் முந்தின
வரிசைறக்அதில் எழுதக்பீற்
வண்மையுடன் சொல்லித் தொழஆ மென்றார்.

பெருநாள் தொழுகை பாடம்

(94) பிந்தித்தொழும் ரண்டாம் றக்அதினில்
பேணியிரு மூன்றில் ஒன்றொழிய
அந்தமுடன் அஞ்சு முறைதக்பீற்
அழகாயுரைப்பானென் றார்ஙாயதில்.

(95) தொழுதபின்பிரு குத்பாச்சொல்வான்
துய்யகுத்பாவில் முந்தினதில்
தெளிவாம் தக்பீறு 1திஸ்உமுறை
சொல்வான்ஆகிறும் எழு முறையே.

(96) பெருநாள் தன்னிலே தக்பீற் சொல்வான்
பேணித்தொழுகையில் புகுதமட்டும்
வரிசையுள ஹஜ்ஜு பெருநாள் தன்னில்
வன்மைபர்ளின்பின் தக்பீர் சொல்வான்.

(97) வரிசை அறபாவின் ஸுப்ஹில் நின்றும்
வண்மை அய்யாமுத் தஷ்ரீகென்னும்
பிரிசமுடன் அஸ்ற் தொழுகைமட்டும்
பெரியோன் தனை நாடி தக்பீர் சொல்வான்.

---

1 ஒன்பது

(98) மதியில் பொழுதினில் மங்கலுண்டாய்
வாகாய் இருறக் ஆத்துத் தொழ
பதியிலுள பேர்மேல் ஸுன்னத்தென
பகருமதிற் பாங்கைப் பகரக்கேளீர்.

{ கிராணத் தொழுகை

(99) நின்றுதொழுதபின் றுகூஉசெய்வான்
நெறியாகப் பின்னும் நிலையில் வந்து
வென்றியுடனோதி பின்றுகூஇல்
மீண்டும் இஃதிதால் வந்த பின்பு.

(100) நன்றியுளஸுஜூ திடையில் வந்து
நலமாகப் பின்னும் ஸுஜூது செய்து
தண்டியெழுந்து முன் றக்ஆத்துப்போல்
தகுமாய்த்தொழுதிரு குத்பாச்சொல்வான்.

(101) இந்தவகையான ஸுன்னத்தன்றி
ஏற்றமுள நபில் தொழுகை தன்னை
அந்தமுள 'ஸலாத் தின்மாலை'யில்
அடியேனுரைத்திட்டே னதனைப்பாரீர்.

(102) ஆடவர்கள்மேல் பாலிகானால்
ஆடைதனில்பட்டு ஆடைகளும்
சூடஹறாமாகும் வல்லியர்க்கு
சுத்தமுளஹலா லாகுமென்றார்.

{ உடு மானம்.

(103) குறைந்த [1]'ஹரீறு'தான் ஆடவர்க்கு
குறிகேடணுகிய ஹறாமா மென்றும்
நிறையில் பருத்திபோல் கொற்றதுடன்
நின்றால் சரியாக வுடுக்காமென்றார்.

(104) செத்த முஸ்லிமை குழிப்பாட்டவும்
சீராய் கபன் செய்ய வும்அவனை
வெற்றியுடன் நன்றாய் தொழுவிக்கவும்
விரைந்து அடக்கவும் விதியாமென்றார்.

{ ஜனஸா பாடம்.

---

1 பட்டு

(105) ஷஹீதாய் மரித்தோனை விழும்பிள்ளையில்
சிவன் தனைக்கொண்டு துடித்திலாது
நஹ்யாம் விலக்காகும் குளிப்பாட்டுதல்
நெறியாம் தொழுவிக்க வும்விலக்காம்.

(106) ஒற்றைப்படக்குளிப் பாட்டுதலும்
உரைப்பாய்கற்பூர மிலந்தையிலை
வெற்றிபெறப்போட்டு குளிப்பாட்டுதல்
விருப்பமுள ஸுன்னத் தாகுமென்றார்.

(107) சட்டை தலைப்பாவும் புனைந்து மூன்று
சங்கையுள வெள்ளைப் பிடவை தன்னில்
கெட்டியாய் வைத்து கபன் பொதிய
கீர்த்தியுளஸுன்னத் தாகுமென்றார்.

(108) ஜனாஸாத் தொழுகையின் வகையாவது
செப்புவான் அவ்வல் தக்பீறும் பின்
கனமான பாத்தி ஹா அதின்பின்
கவல்வான் தக்பீறதற்கு பின்பே.

(109) நபிக்கு ஸலவாத்து சொல்வான்பின்பு
நலமாம் தக்பீறு உரைத்தபின்பு
புவியில் மரிக்கின்ற மையித்துக்கு
புகல்வான் ஒரு துஆ அதற்குப்பின்பே.

(110) நாலாம் தக்பிறு சொல்வானதில்
நலமாய் ஒரு ஸலாம் சொல்வானென்று
கவ்லாயுரைத்திட்டார் இஸ்பஹானி
கனதியுள நாயத் துக்திஸாறில்.

(111) பந்தையவிழ்க்கவும் கிப்லாக்கு நேர்
வலதுபுறம் சாய்த்து கிடப்பிக்கவும்
அந்தமுள்'லிஹ்த்'மைத்திடவும்
ஆழமிருத்தவும் அழகாமென்றார்.

(112) சாந்துபூசவும் புரைகட்டவும்
சங்கையலவென்றும் புலம்பியழல்
பாய்ந்து அடித்திடல் தலைகிழித்தல்
பஸீஹத்துளகுப்பாற் குணத்திலாகும்.

(113) இருவர்தனை யொரு கப்றிலாக்க
ஏற்றமணுகாத பித்அத்தாகும்
உரமாய் மிகுத்தால்தங் கடத்துக்காக
ஒருவருடன் பின்னும் அடக்கலாமே.

(114) அடக்கி மூன்றுநா ளாகமட்டும்
அஹ்லானபந்தை மினவலாகும்
ஒடுக்கந்தனிலுள்ள கருமங்களை
யுன்னியறிந்துபின் நடந்துக்கொள்வீர்.

(115) அஞ்சொட்டை யுண்டா யிருந்தாலொரு
ஆடு விதியாகும் ஷற்தின்படி
வஞ்சமற மூன்று பத்துமாட்டில்
வாகாயொரு காளை விதியாகுமே.

ஜகாத்
வுடைய
பாடம்.

(116) நாற்பது ஆடுண் டாயிருந்தால்
நலமாயதிலொன்று கொடுக்கவிதி
கூர்ப்பாகநூற்றே டிருபத்தொன்று
கூடினல்ரண்டு கொடுப்பானென்றார்.

(117) இருநூறு ஆட்டில் மூன்றுவிதி
ஏற்றமுள்ள நானூற் தன்னில் நாலாம்
பிரிவாயறிவீரோவ் வொரு நூற்றிலே
பேணிவிதியாகு மொவ்வென்றென்றார்.

(118) பொன்னுலிருபது களஞ்சுண்டானல்
பூணுமதிலரைக் களஞ்சி பின்பு
பொன்னுஇதைவிட ஏறுமானல்
பகர்ந்த கணக்கினில் பூணுமென்றார்.

(119) இருநூறு வெள்ளி யுண்டானாற் கேள்
எறமுதல் ஜகாத் தைந்து வெள்ளி
பிரிவாயதைவிட்டு மிச்சமானால்
பேசும்படிஜகாத் துண்டாமென்றார்.

(120) ஹலாலானபூணா ரந்தனிலே
கனமானஜகாத் தேறாதென்று
ஜலாலத்துள ஷெய்கு அபூஷுஜாஉ
செப்பினார்நாயத் துக்திஸாரில்.

(121) தானியம்பழ வர்க்கமதில்
தகுமாயாயிரத் தொருநூற்றதல்
கூனை யிறைப்பன்றி விளைந்தாலதில்
கூடும்ஜகாத்துநூற் றறுபதென்றார்

(122) கச்சவடச்சரக் கானவையில்
1‘ஹவ்லா’ண்டு சென்றா லதனைக்கொண்டு
வச்ச விலைகொண்டு 2‘நிஸா’பெட்டினால்
வாகாய் பத்துக்குக் கால்பூணுமே.

(123) வெள்ளியாகிலும் பொன்னாகிலும்
மேவியெடுத்தக்கால் விளைதலத்தில்
அள்ளி கொடுக்கஅன் னேரம் விதி
அவன்மேல் பத்துக்குக் காலாகவே.

(124) புதையல்தனையெடுத் தாலதிலே
பூணும் பிசகின்றி யஞ்சிலொன்று
பதியிலுளமுஸ் லிம்களிதை
பரிவாகப் பேணி நடப்பீர்களே.

(125) ஜகாத்துகள்விதி யாம்ஷற்து
ஷறபாம் இஸ்லாமும் ஹுர்ரிய்யதும்
ஹக்காம் நிரப்பமாம் கையாட்சியும்
ஹவ்லெனுமாண்டு நிஸாபுமாமே.

1 ஒரு வருஷம் 2 அளவு

(126) காடுதனிலேறி மேயுதலும்
கருத்தாயடிமைகள் விதைக்கிறதும்
கூடும் தவசங்கள் தங்கரிக்கும்
1 'கூத்'தாயிருக்கவும் ஷற்தாமென்றார்.

(127) தோலைக் களைந்துபின் அஞ்சுகோட்டை
துலங்கும்படிகாண வும் ஷற்தாம்
கோலமுள 2'கறம்' 3'நக்ல்' மரத்தின்
குணமான கனி கள்ஷற்தாம்.

(128) வரிசையுள நோன்பு முடிந்ததாகில் { ஜகாத்து பித்று
வன்மையுளபித்ற ஜகாத்துஎன்னும்
பிரிவாய் ஷற்துடன் வாஜிபாகும்
பெருகும் தவசத்தில் ஒரு 4'ஸா' என்றார்.

(129) தனக்குப்போகத்தன் குடும்பத்திற்கும்
தகுமாகபோகி மிச்சமுண்டாய்
கணக்கு இடைதூக்கி அஞ்சுருத்தல்
கருத்தாயொரு 5'துலு தும்' அளிப்பான்.

(130) தனக்கும்தன்னுட 6'நபகா'ப்பூண்ட
சங்கை முஸ்லிம்கள் தங்களுக்கும்
சினக்கும் மனதன்றி ஜகாத்துவாங்க
செப்பமுடனாகும் பேர்க்களிப்பான்.

(131) அவ்வூர்தவசத்தில் தண்டியொற்று
அள்ளியிருகரத் தால்நாலுகை
செவ்வாகக் கண்டால் 'ஸா'அளவு
சிறப்பாக சிலர் காணுமென்றார்.

(132) ஷவ்வால் பிறைஅவ்வல் தனைத் தொடுத்து
தகுமாயதன் பகல் தீரமட்டும்
செவ்வாய்ப் பிசகன்றி பித்றளிக்க
செவ்வாமெனச் சொன்னார் பிக்ஹுக்குள்ளே.

---

1 உணவு 2 முந்திரிச்செடி 3 ஈத்தமரம் 4 மரக்கால் 5 மூன்றிலொன்று 6 செலவு

(133) பகிருதனக்கும்பின் மிஸ்கீனுக்கும் { ஜகாத்து பங்காளிகள்
பரிவாயதில்வேலை செய்வோருக்கும்
1'ஹகீரும்'குபிர் தனை விட்டும் 2'கல்பை'
காத்து தீனினில் வந்தோனுக்கே.

(134) தனக்குத்தலைமுதல் கொடுக்கவென்று
தகுமாய் ஸாதனம் எழுதியோர்க்கும்
இணக்கம் 3'தைன்'பட்ட பேர்களுக்கும்
ஏற்றமுள பீஸபீல் காரருக்கே.

(135) பாதை வழிப்போக்கர் தங்களுக்கும்
பரிவாயிவரிரு நான்கு வகை
ஓதியுரைத்தோரில் சிலரில்லையால்
உண்டானவகை பேர்க்களிப்பான்.

(136) முதற்கொண்டும்தொழில் தன்னைக் கொண்டும்
மொடுவாயிருப்போர்க்கும் பையலுக்கும்
அதிகமுள ஹாஷிம் முத்தலிபு
அவ்லாதெனும்மக்கள் தங்களுக்கும்.

(137) பதியிலுள காபிர் தங்களுக்கும்
படிவாஜிபாம்பேர் தங்களுக்கும்
கொதியாமனம்பகீர் மிஸ்கீன் ஹக்கை
கூறும் பேர்க்கொண்டும் கொடுக்கொண்ணாதே.

(138) சங்கையுள நோன்பு விதியாம்வகை { நோன்பின் பாடம்.
சாற்றுறேனிஸ் லாம் 4புலூகும்
புங்கமுள அக் லெனும் புத்தியும்
பெலமாம் குத்றத்தும் வேணுமென்றார்.

(139) நிய்யத்தும்பின்பு ஊண்குடிப்பை
நிகாஹெனும் சேர்க்கை யோங்காரத்தை
துய்யபடி தவிழ்ந் திருக்குமது
துலங்கும் பர்ழாக இருக்குமென்றார்.

1 கேவலம் 2 ஹிருதயம் 3 கடன் 4 பருவம் எய்தல்.

(140) பற்ஜில்வத்இனல் மனிநீங்கலால்
பங்கமிலாப்பிள்ளை துடக்கானதால்
குறிகேடணுகிய தொளையாலொன்றில்
[1]'ஹுக்னதெ'னும் திரிசொண்டதாலும்.

(141) தலையில் திரிவிட்டால் நாசுதனில்
தருமாம்நஷீம்தான் புளிந்ததாலும்
கலைசேர் இஸ்லாமை மாறினலும்
கனதியுளநோன்பு முறியுமென்றார்.

(142) அஞ்சு நாளையில் நோன்புவைக்க
ஆகாதிருபெரு நாளும் ஹஜ்ஜின்
மஞ்சுவுள அய்யாமுத் தஷ்ரீகெனும்
வண்மையுளமூன்று நாளுமென்றார்.

(143) சேர்க்கைதனைநாடி றமளான் தன்னில்
சேர்ந்தமனிதர்மேல் கழாவும் தெண்டம்
நோக்குமதுமுஸ்லிம் அடிமை
நெறியா[2]'யித்கா'க விதியாமென்றார்.

(144) அதுக்கு பெலமில்லான் ரண்டுமாசம்
அழகாய் துடர்நோன்பு வைக்கவிதி
இதுக்குபெலனில்லான் ஆறுபத்து
எளிய மிஸ்கீனுக் கன்னமீவான்.

(145) வண்மையுளநோன்பு பூண்டிருக்க
மரித்தாலவனுக்காய் விட்டநாளின்
எண்ணின்படி யொவ்வோர் [3]'முத்'தளிக்க
இருக்கும் [4]'வலி'கள்மேல் கடனாகுமே.

(146) கிழடு மிகுந்ததால் பெலமில்லையால்
குணமாம் நோன்புவை யாதிருந்தால்
அழுவால் ஒரு முத்து அத்தினத்திற்
அளிக்க விதியென்றார் அபூஷுஜாஉ.

---

1 (இனிமா) பிச்சாங்குழலடித்தல் 2 உரிமைவிடுதல் 3 இருகையும் சேர்த்து 4 வாரிசு
[illegible]

(147) சூலிபால் தாச்சி தனைப் பயந்து
துய்மையுள நோன்பு விட்டிருந்தால்
கோலம் பெறகழா அவள்மேல் விதி
குழந்தைதனையஞ்சி விட்டிருந்தால்.

(148) சீலம் பெறகழா தன்னுடனே
சிராய் ஒரு முத்து [1]'கப்பாறத்' தாய்
ஆலம்தனிலுள்ள மிஸ்கீனுக்கு
அளிக்க விதியென்றூர் அபூஷுஜாஉ.

(149) முத்தாவது கேளாய் ஒருருத்தலும்
மோசமற அதில் மூனத்தொன்றும்
வெற்றியிருக்'கூரின் ஒருத்தலென
விளம்பினூர் நாயத்துக்திஸாரில்.

(150) நஷலால்நெடும்ஸப ரூல் விட்டவன்
நலமாம் மறுமாதம் விட்ட நோன்பை
பிசகன்றிகழாச் செய்வானென்றும்
பேசினூர் காழி அபூஷுஜாஉ.

(151) இஃதிகாபதின் கருத்துவைத்து
இனிய மஸ்ஜிதில் இருக்குமது
மிகுதியுகப்பான ஸுன்னத்தென்று
மேலான அபூ ஷுஜாஉரைத்தார்.

இஃதிகாபிருத்தல்

(152) இஸ்லாம்தனிலுண்டாய் பாலிகுமாய்
இனிய அக்லுண்டாய் ஹுர்றத்துமாய்
குஷியாம்படி நன்றாய் நடையுமுண்டாய்
குணமாய்வழியச்ச மில்லையுமாய்.

ஹஜ்ஜுடைய பாடம்

(153) முசியாமல் நடை செய்யப்பெலன்
மோசமறவுண்டா யிவையேழ்கொண்டு
அசையாக்கஃபாவை நாடி ஹஜ்ஜு
அன்பாகச்செய்ய விதியாமென்றூர்.

---

1 தெண்டம்

(154) நிய்யத்துடன் இஹ் ராமும்பின்பு
நெறியாம் அறபாவில் தரிப்பதுவும்
துய்யகஃபாவை சுற்றுவதும்
தொங்கோட்டமோடி கல்லெறிதல்.

(155) ஐயமற முடி யிற்சிலதை
அரிவதும் ஹஜ்ஜின் [1]'அற்கான்'கும்
மெய்யாம் அறபாவில் தரிப்பதன்றி
மேவும் உம்ருக்கு அற்கானமே.

(156) உம்ருதனில்ஹஜ்ஜு முந்துவதும்
உகப்பாம்[2]'தல்பியத்' துரைப்பதுவும்
செம்மையாம் [3]'குதூ'மெனும் தவாபும்
சிறப்பாம் 'முஸ்தலி[4]பா'த்தங்கலே.

(157) துஆவும் [5]'றக்அதைன்' மினாத்தங்கலும்
தகுமாம் விதாஉ [6]'தவாபி'வைகள்
[7]'தவாபு'மிகுந்திடும் ஹஜ்ஜுடைய
சங்கையுள ஸுன்னத் தாகுமென்றார்.

(158) தையலுள ஆடை யுடுப்பதுவும்
தலையை மறைப்பதும் ஆண் பிறந்தோர்
தையல் வதனத்தை மறைப்பதுவும்
சீப்பும் சிரைப்பும்நல் முடியதனே.

(159) கையில் வன்காலில் நகமறுப்பும்
கருதிமணம் வேட்டை மிருகம் கொல்லல்
செய்யும் நிகாஹெனும் மோகசோம்பும்
சிறப்பாம் [8]'முஹ்ரிம்'மேல் ஹறுமாமென்றார்.

(160) ஹறுமாம் செயல்தனை செய்துவிட்டால்
கொடுத்தாக்கால் தெண்டம் ஹஜ்ஜுகூடும்
போராம் அபத்தினில் புகுவித்ததால்
பிரியுமவன் ஹஜ்ஜு விதியாய்ப்பூணும்.

---

1 பர்ழு 2 லப்பைக் 3 முன்னேக்குதல் 4 தங்குமிடத்தின் பெயர்
5 2 ரக்அத் 6 சுற்றுதல் 7 புண்ணியம் 8 இஹ்ராம் கட்டியவர்

(161) கண்காணு வஸ்தை நஜீஸானதை
கையாட்சி யில்லா சரக்கானதை
சென்மைபுரோஜன மில்லாவஸ்தை
செப்பமாய்விற்க வாகாதென்றார். — வியாபாரத்தின் பாடம்

(162) 1'பவ்ஜான்' தானிய மீரணிப்பாய்
பாங்குடன் விற்க வாகாது கேள்
மவுனமுளத் தாயைப் பிள்ளை தனை
வடுவாய்ப் பிரிக்கவுமிருவரையும்.

(163) அருதமுள்ளஷடுத்தும்சொல்லும்
ஆகாஹறாமுக்கு விற்குதலும்
தகுதியுளநபி விலக்கல்செய்த
தண்மை யணுகிய ஹறாமாகுமே.

(164) வெள்ளிதனிலன்றி பொன்னிலன்றி
விரும்பியருந்துற பொருளிலன்றி
கொள்ளி நரகத்தில் புகுதிவிக்கும்
கொடுமையுள வட்டி யில்லையென்றார்.

(165) இந்தவினத்தையிவ் வினங்களுக்கு
இனிதாகவிற்க ஜாயிஸில்லை
அந்தமுடனுகும் சரிசரியாய்
ஆனவிலைகைக்கு கைமேலென்றார்.

(166) 2'ஈழம்' தனை 3'யிர சதம்' தனக்கு
ஏற்றவாட்டமாய் கைரொக்கமாய்
வாழும் தவசத்தை வேற்தனக்கு
வண்மையுடன் விற்கஜாயிஸென்றார்.

(167) சதிமானவிற்றலாகாதென்று
தகுமாமிருவரும் பிரியாமலே
பரிவாயிருக்குமட்டும் பொருத்தம்
பாங்காயுண்டென பகரலுற்றார்.

1 பாக்கியம் 2 வெள்ளி 3 பொன்

(168) மூன்றுநாள் மட்டும் கியார்ஷற்து
மோசமறவுண்டாம் ஐபுண்டாகில்
என்றபடியதை மீளப்போட
எப்போதாகுமென் ருர்கிதாபில்.

(169) கொண்ட சரக்கைகை யாடமுதல்
குணமாயதை விற்க ஆகாதென்றும்
துண்டாமிறைச்சியை ஹயவானுக்கு
துய்தாகவிற்க ஆகாதென்ருர்.

(170) பச்சையினத்தையவ் வினம்தனக்கு
பச்சையாய் விற்க ஆகாதுகேள்
இச்சையுடன் பாலு தன்னை விற்க
இனிதாய் ஆகுமென் ருர்கிதாபில்.

(171) வன்னிப்பாய் முற்றுண் டானவையில்
வாகாய் [1]'ஸலமெ'னும் கையடிப்பில்
மன்னன ருட்படியாகுமென
வழுத்தினர் ஙாயத்துக்திஸாரில்.

(172) தனமாய்விலைதனைக் கையாளிக்க
ஷற்தாம் ஸலமெனும் கையடிப்பில்
குணமாயுறுதியை குறித்திடவும்
கூறும் ஷற்தென்ருர் இஸ்பஹானி.

(173) நெல்லன்றியுள்ள தானியத்தில்
நெறியாக ஸலம் ஆமெனவும்
வல்லவொரு வஸ்தில் ஸலம் கொடுத்தால்
மாறியொரு வஸ்தை வாங்கொணுதே.

(174) குழந்தை பைத்தியர் மடையர்விற்பும்
கொள்வது ஸஹீஹல்லவென்றும்
இழந்த [2]முப்லிஸின் விலைகொள்ளவே
இருக்கும்உடைமையில் ஆகாதென்ருர்.

---

1 முன்கடன் 2 வறுமையுள்ளவன்

(175) மவ்த்தில்விழத்தட்டும் நசல்கொண்டவன்
வாகாயவன்புறத் இப்படுத்தில்
அவத்த னவன்மாலில் மூன்றிலொன்றுக்
கதிகம் செல்லா தெனநவின்றார்.

(176) நாயன்விடையன்றி யடியாருதான்
நலமாய்க்கொள்வதும் விற்பதுவும்
தூயபடியாகா தவன்[1]'திம்மதி'ல்
செய்தாலுரிமைப்பின் துடரப்படும்.

(177) பணையம்பிடித்தவஸ் தானதவன்
பரிமாறஹறும் கடப்பன்றியே
குணமாய் அதுசேதம் போனால்விலை
கொடுக்கவிதியாகு மெனவோதினார்.

(178) சரிபோந்ததைதன் தனை ஹவாலா
சங்கையுடன்சாட்ட ஆமெனவும்
பரிவாயிருவரை மூதலித்தோன்
பதிந்ததைதன்விட்டுப் பிரிவானென்றார்.

(179) இருவருடைமையைக் கலந்துவொன்றாய்
இனமொற்றிருக்கவும் [2]'இத்ன்'கொடுத்தும்
கருதியிருவரும் கூட்டுக்கூடி
கச்சவடம்செய்ய ஆகுமென்றார்.

(180) தானாகச்செய்யும் கருமம்தன்னில்
தகுமாயொருவரை வக்கீலாக்கவும்
தானமுடனாகும் கடப்புடனே
[3]'தலபும்'வக்கீல்மேலே பூணுமென்றார்.

(181) அற்றவிலையன்றி ரொக்கமன்றி
அழகாய்வக்கீலுக்கு கொள்ளவிற்க
வெற்றியுடன்ஜாயி ஸல்லவென
மீழும்வக்காலத்தின் கருமமென்றார்.

---

1 பொறுப்பு   2 உத்திரவு   3 நாசம்

(182) அழகாம் வக்கீலுக்கும் அவன்வகீல்க்கும்
அன்பாம் வக்காலத்துக் கருமம்தன்னை
மீழவருத்தவும் ஆகுமென்று
மேலானஷெய்கு உரைக்கலுற்றார்.

(183) ஆழும்பெரியவன் ஹக்குகொண்டு
அழகாம்[1]'இக்ருறு' வெனுமுரைப்பு
மீளும்படியாகும் பின்திரும்பி
மாறிமொழிவது வாகல்லவே.

(184) சூதுபக்ஷெனும் கிருழுடைமை
துலக்கமுளரொக்க நாணயமாய்
தாதனளவிலே கையாறித்து
சொல்லும் ஷற்தெல்லாம் சொல்வார்களே.

(185) கொண்டசரக்கின்மேல் பத்திலொன்றாய்
குணமான [2]'ரிப்ஹத்' தென்னும்லாபம்
நன்றியுடனாகும் ஷற்தின்படி
நலமாயறிந்துக்கொள் உலமாக்கள்பால்.

(186) உடமைதனக்காக வுடலுக்காக
உண்மையுடன்பிணைப் பட்டாற்பூணும்
கொடுமையுளப்பிணைப் படுகுதலை
குவலயத்தோர்கள் பேணிக்கொள்வீர். { பிணையின் பாடம்

(187) ஒளித்தோடிப்போன பையல்தன்னை
உகயத்துடன்தேடிப் பிடித்துவந்தால்
அழுத்தமுடன்சொன்ன கூலியுண்டும்
அல்லா[3]'துஜ்றத்'து இல்லையென்றார்.

(188) கூலிக்காரன்மேல் கடப்பன்றியே
குணமாய்[4]'ழமான்'விதி யாகாதென்றும்
மேலிலுளகூலி யும்அமலும்
விளங்கஷற்தாகும் வெளியாகவே.

---

1 விண்ணப்பம் 2 இலாபம் 3 கூலி 4 பிணை

(189) இரவல் வாங்கின பொருள்சேதமில்
இறுக்கவிதியாகும் விலையதுக்கு
கருதியவனதில் புரோசனங்கள்
கையாட்சி செய்ய ஹலாலாகுமே

(190) தெருவார்விடையன்றி தெருவீதியில்
தீங்குவருத்துற கருமங்களில்
மரம்போல்கிண்டும்போ லிவைகள் செய்ய
வடுவாமெனச்சொன்னர் வுலமாக்களே.

(191) உடைமைதனிற்பொருள் தனிலிணக்கம்
உண்மையுடனாகும் பிசகன்றியே
கொடுமைமிகவுள்ள வழக்கானதை
குணமாய்த்தவிழ்ந்து‘ஸுல் ஹா’வீர்களே.

(192) அடர்ந்தேற்றமாக எடுத்தவஸ்தை
அதனாலுளபுரோ சனங்களையும்
துடர்ந்தவுஜ்ரத்தும் அதனுடனே
சேர்க்கவிதியெனும் சுமைபூணுமே.

(193) வெள்ளாண்மைசெய்ய நிலம்கொடுத்தால்
விளைந்ததாலதின் புரோசனத்தில்
விள்ளும்வகையுண்டு மெனக்கூறினல்
வேளாமவன் [1]‘திம்மத்’ தில்ஆகுமே.

{ வேளாண்மையின் பாடம்.

(194) காலமிருக்கின்ற பொருளானதை
காணும்புரோசனம் தனையுகப்பாய்
ஆலம்தனில்விற்க வாகுமென்று
ஆலிம்இஸ்பஹா னியுரைத்தார்.

(195) [2]பாழாமவாத்தெனும் புவியதனை
பரிவாகவளர்த்தி னலதற்கு
வாழும்படி[3]‘மில்கா’ யிருப்பானென
வழுத்தினர்நாயத் துக்திஸாரில்.

---

1 பொறுப்பு 2 பாழான இடம் 3 உடைய தாக்கல்

(196) கொடுத்தஹிபதெனும் உடைமைதன்னை
குறிகேடணுகவே வாங்கொண்ணாதே
தொடுத்தவுடைமையை வாங்கலாகும்
துய்யமகவுக்கு கொடுத்தாலென்றார்.

(197) பாழாமவாத்திலல் லதுவெளியில்
பண்டமெடுத்தாக்கால் அதைக்காண்பித்து
வாழும்மஸ்ஜிதில் கடைக்கூட்டத்தில்
வாகாயொருவாண்டாய் பின்னாளுவான்.

(198) வந்தாலுடைமையை அதன்விலையை
வண்மையுடன்கொடுப் பான்மறுத்தால்
அந்தபொருளதைக் கொடுப்பானது
அப்பாலிருந்தாலென் றார்கிதாபில்

(199) பஸாதாயழிகின்ற 1‘லுக்தா’ தன்னை
பரிவாயறிந்தபின் விலைப்பூட்டவும்
உசாவியதைவிற்று விலைபேணவும்
உலத்தியதைப்பேண வும்ஆமென்றார்.

(200) வழியிலொருபிள்ளை தனையெடுத்தால்
வாலியெனும்சீமை யாரின்மேலே
குழவிதனைப்பேணி பைத்துல்மாலில்
குணமாய்வளர்த்திட விதியாமென்றார்.

(201) அமானத்தெனும்பொருள் சேதப்பட்டால்
அதனைகபூல்செய்து வந்தவர்மேல்
ழமானும்விலைபூணும் அவன்குறையா
லுரைத்திடவது செய்தாலென்றார்

(202) துன்யாப்புரோசனம் தனையிழக்கும்
துய்மையணுகாத கடன்களெல்லாம்
முனிவான ஹறும் ஷற்துரைத்தால்
மோஷமறவாகும் ஷற்தில்லையால்

1 பொறுக்கிஎடுத்தல்

(203) ‘இக்ருறெ’னும்கட னுடைமையது
இருந்தால்கொடுத்தவன் திரும்பிவாங்க
சக்கன்றியாகும் இல்லாவிட்டால்
தருமாய்வகையுண்டாய் வாங்கலாமே

(204) இறுக்கவகையில்லா விட்டால்லேசாய்
இவன்பால்வரமட்டும் பொறுக்கவிதி
மறிக்கவும்மண்டில் கரையேற்றவும்
வடுவாம்ஹறுமென்று உலமாசொன்னர்

(205) கைக்கூலியெனும் கடனைவாங்கி
கருத்தாலவன்பின்னும் மறுத்ததால்கேள்
சக்கன்றிமிச்சம் வாங்கஹறும்
[1]‘தஃஸீரு’ஆகும் மறுத்ததுக்காய்

(206) வரதெனும்அனந் திரக்காரர்கள் { பாகப்பிரிவினையின் பாடம்
வதியும்பதினேழு வகையதுகேள்
ஷறபுமிகவுள்ள ஆண்வகையில்
தருமாகப்பத்துப் பேர்களுண்டே.

(207) மகனுமவன்மகன் கீழ்போமட்டும்
பாவா அவன்பாவா மேல்போமட்டும்
இஃவானுடப்பும்பின் னவன்மகனும்
[2]‘அம்மும்’அவன்மகன் புருஷனுமே.

(208) உரிமைவிடுத்தோனும் இவையீரைந்து
ஓசையுளவாணய்ப் பிறந்தோர்பெண்ணில்
கருதியனந்திரர் எழுவகையாம்
கவலாயுரைத்திட கேட்டிடுவீர்.

(209) மகளும்மகன்மகள் தாயவள்தாய்
வண்மையுடன்பிறந் தாள்பெண்சாதி
புகழும்[3]‘முஃதிகத்’ தெனுமுரிமை
போற்றலுடன்விட்ட பெண்ணுமாமே.

---

1 சிக்ஷை 2 சிற்றப்பன், பெரியப்பன். 3 உரிமைவிடப்பட்ட

(210) தள்ளுண்டுபோகா ரனந்திரரீர்
'ஜவ்ஜானி'யெனும் பெண்மாப்பிள்ளை
தெள்ளியதந்தை அன்னையரும்
சிறப்பானமக்கள் ஐவருமே.

(211) தெற்றாய்வளர்த்தோர்க்கும் அடியாருக்கும்
செழிப்பாகநாயன் தனக்குப்பிள்ளை
வெற்றியுடன்பெற்ற வெள்ளாட்டிக்கும்
வீணாய்க்கொலைசெய்த பேர்களுக்கும்.

(212) சுத்தியுளஇஸ் லாம்துய்மையை
துய்தாயணுகாத [1]முற்தத்'துக்கும்
செத்தவிருமார்க்கர் தங்களுக்கும்
சிறப்பாம்அனந்திர மில்லையென்றார்.

(213) வேதந்தனிலாதி அனந்திரத்தை
விரிவாய்ப்பிரித்தபங் கின்வகையை
நீதமுடன்கேளும் ஆறுபங்காய்
நிகழ்த்தினான்செப்பக் கேட்டிருங்கள்.

(214) பாதியதின்பாதி யதனில்பாதி
பதிவாயதில்பங்கில் இரண்டுபங்கும்
ஓதியுரைத்தமூன் றில்லோர்பங்கும்
உயர்ந்தஅறுபங்கி லொருபங்குமாம்.

(215) மகளுக்கும்மகன் மகள்தனக்கும்
வண்மையுடற்பிறந் தாள்தனக்கும்
மகவுயிழந்தபெண் சாதியுட
மாப்பிள்ளை தனக் கும்பாதியாம்.

(216) நாலிலொருபங்கு பெண்சாதிக்கு
நலமாய்ப்பிள்ளையுண் டாயிருக்கில்
கோலமுளகண வன்தனக்கும்
கொடுக்கவிதியென்றார் இஸ்பஹானி.

1 மதமாறினவன்

(217) கணவன் தனக்குப்பிள் ளையில்லாத
கணவி தனக்கும்கால் பங்குண்டாகும்
அணவன் தனக்குப்பிள் ளையிருந்தால்
அரைக்காலெனுமெட்டி லொன்றுமென்றார்.

(218) மூன்றிலிருபங்கு இருபெண்மக்கள்
மோசமறரண்டை விட்டுஏற
கூண்டுபடியுண்டா யிருந்தால்கிட்டும்
குணமாயறிந்துக்கொள் திறமாகவே.

(219) குமாரனிருமகள் தங்களுக்கும்
குணமாமிருவுடற் பிறந்தாளுக்கும்
தமாமாய்திலுவிலீர் பங்குகிட்டும்
தகுமாய் மிருந்தாலும் ஹுக்மிதுவே.

(220) மூன்றிலொருபங்கு பிள்ளையில்லா
முன்னைருட்படி மவ்த்தடுத்து
மாண்டுமரித்தவ ரன்னையர்க்கு
வண்மையுடனுண்டு மெனவோதினர்.

(221) தாயின்புறத்தினு லுள்ளவிரு
சங்கையுடப்புக்கும் மிச்சத்துக்கும்
நாயனருட்படி தாயின்மூன்றில்
நலமாயுண்டாகும் பரிசுகேளீர்.

(222) மண்ணில்மறைவாகும் மய்யித்துக்கு
மக்களிருந்தாலும் இல்லாவிட்டால்
திண்ணமுளவுடப் பொன்றுக்குமேல்
சிறப்பாயிருந்தாலும் உண்டாமென்றார்.

(223) அன்னைதனையீன்ற அன்னையர்க்கும்
ஆறிலொருபங்கு வுண்டதுகேள்
மின்னத்துள அன்னை யில்லாவிட்டால்
மோசமறஆறி லொன்றுண்டாமே.

(224) மகன்தன்மகளுக்கும் ஆறிலொன்று
வண்மையுடனுண்டாம் பரிசதுகேள்
தகுதியுளமகன் மகளுடனே
தன்தன்மகளுமுண் டானாலென்றார்.

(225) தந்தையுடற்பிறந் தாள்தனக்கு
தகுமாம்ஸ¬துஸெனும் ஆறிலொன்றும்
அந்தமுடனுண்டாம் அவளுடனே
அணைபிதாமகளுண் டானாலென்றார்.

(226) பிதாவின்பிதாவுக்கும் ஆறிலொன்று
பெலமாகவுண்டாம் பரிசுகேளாய்
குதாவினருட்படி யவன்தகப்பன்
குணமாகவில்லா திருந்தாலென்றார்.

(227) அன்னைபுறத்தினால் வந்தவொரு
அண்ணன் தனக்குண்டாம் ஆறிலொன்று
அன்னாரிருக்கையில் அவ்வன்னைக்கு
அழகாய்மகனுண்டாய் துலுதுண்டாமே

(228) சொன்னமையித்தின் பிள்ளையிவன்பிள்ளை
சொந்த தகப்பனோ பாட்டனுண்டேல்
மின்னத்துள தாயின் மகன்தனக்கு
மீறாதுவீழு மெனவுரைத்தார்

(229) சகோதரமான பேர்களுக்கு
சங்கைமகன்பிதா விருக்கையிலே
தகுமாம்அனந்திர மில்லையென
சாற்றினார்நாயத் துக்திஸாறில்

(230) இவர்கள்தனைக்கொண்டு இனியபிதா
இனிதானமக்கள் தனக்[1]'கிற்து'
தவனமுடனில்லை யெனவுரைத்தார்
சங்கையுளநாயத் துக்திஸாறில்

---

1 அனந்திரம்

(231) செத்தோர்உடைமையில் துவக்கமாக
ஸக்காத்துடைமைகள் எடுக்கப்படும்
பத்திபெறப்பின்பு கடன்தனக்கு
பாங்காகநீக்கப் படும்பிறகு

(232) புத்தியுடனவன் வஸிய்யத்திட்ட
பொருள்கள்தன்னிலே ஷற்றின்படி
வெற்றிபெறநன்றாய் நடத்தப்படும்
விரைந்து'[1]தஜ்ஹீஸ¬' பின்விதியாம்.

(233) நாட்டான் மகனுக்கு நாலுபெண்ணு
நலமாகச்சேர்க்கஜாயிஸாகும்
சீட்டுமுறியுள்ள பயல்தனக்கு
ஸவ்ஜத்துரண்டு கொள்ளலாமே.

{ கல்யாணத் துடைய பாடம்

(234) தனக்குப்பிறந்தவன் வெள்ளாட்டியை
சங்கைநிகாஹ¬கை யடிப்பதற்கு
கணக்குவுரைப்பாக நால்ஷற்து
ஹக்காக வேணுமெனவுரைத்தார்.

(235) ஹ¬ர்றதெனும்நாட்டான் மகள்தனக்கு
குணமாய்மஹரீய சத்திகேடும்
ஷர்ரும்ஜினுதனில் வீழ்வோமென
தருமாகவஞ்சி யிருப்பதுவும்.

(236) மார்க்கம்இஸ்லாமில் வெள்ளாட்டிதான்
வாகாயிருப்பதும் இவனிகாஹில்
கூர்ப்பாய்ஹ¬ர்றத்தில் லாதிருப்பும்
குணமீாயிவைநாலும் ஷற்தாகுமே.

(237) நிகாஹ¬செயமுகம் முன்னின்கையை
நெறியாய்பார்க்கலாம் லோச்சுக்காக
ஹக்காகபார்க்க ஜாயிஸாகும்
கடிந்த'ள[2]றாறத்'துக் காகவென்றார்.

1 மரணக்கிரியை 2 தங்கடம்

(238) ஈஜாபும்கபூ லும்வலியும்
இரண்டுசாக்ஷியும் ஷற்தின்படி
நீதமணுகிய நிகாஹதுக்கு
நெறியானஷற் தாகுமென்றார்.

(239) என்தன்மகள்பாத்தி மாவைபத்து
இனியபணம்மஹ் ராயுனக்கு
அந்தமுளநிகா ஹளித்தேனென
அழகாய்ஒலிசொன்னால் பின்மாப்பிள்ளை.

(240) இந்தநிகாஹையான் சொனமஹர்க்கு
இனிதாய்கபூல்செய்தே னெனவிருவர்
வந்தகளரியில் உரைக்கலுற்றால்
வாகாய்நிகாஹ¬தான் செம்மையென்றார்.

(241) தந்தையும் அவர் தந்தையரும்
சகோதரன்களும் பின்னவர்கள்
அந்தமுளமக னும்தந்தையின்
அழகாம்உடப்பும்பின் அவன்மகனும்.

(242) சிந்தைமகிழவே யுரிமையிட்ட
சிறப்பாமவனும்பின் அவனினமும்
நந்தும்படிசீமை யாளுகின்ற
நலமாமரசனும் ஒலியாகுமே.

(243) கன்னியாம்பெண்ணை விடையன்றியே
கட்டிக்கொடுக்க ஆம் 1'முஜ்பிறு'க்கு
மின்னத்துளபிதா வும்அவன்தன்
மேலாம்தகப்பனும் முஜ்பிருமே.

(244) 2'தய்யிபா'ம்பெண்ணை முஜ்பிறுக்கு
சங்கைபுலாகின்பின் அவள்விடையில்
துய்யபடி 3'தஸ்வீஜ¬' செய்ய
துஞ்சாமறுஒலி தமக்கும்ஆமே.

---

1 எதேச்சாதிகாரி 2 கன்னியழிந்தவள் 3 கல்யாணம்

(245) பெண்ணில் ஹறுமாகும் பேர்கள் தம்மை
பேசுறேன் கேளும் நல் அன்னையும்
வண்மையுள அன்னை அன்னையரும்
வாகாயுயர்ந்து தான் போமளவும்.

(246) சென்மமுளமக ளும் அவள் தன்
சிறப்பாம்மக்கள் கீழ் போமளவும்
கண்போல் உடற்பிறந் தாளுமவள்
கருத்தாய்மகளும் கீழ் மட்டுமாமே.

(247) தகப்பனுடன்பிறந் தாளவளும்
தாயினுடன்பிறந் தாளவளும்
உகப்பாமுடற்பிறந் தான்மகளும்
ஓசையுடன்கிள்ளு முலையன்னையும்.

(248) தகுமாமுலைகுடிப் பாலுடப்பும்
சங்கையுளபெண்ணின் அன்னையரும்
புகுதிவைத்திட்ட பெண்சாதியின்
பிள்ளையடங்கலும் ஹறுமாகுமே.

(249) சங்கையுளபிதா அன்னையரும்
தகுமாமவன்பிதா பெண்சாதியும்
புங்கமுளமகன் பெண்சாதியும்
போற்றலுள அவன் மகவின்பெண்ணும்.

(250) ரண்டுவுடப்பையொன் றுய்ச்சேர்ப்பதும்
இவளையும்நல்ல [1]‘அம்மத்’தையும்
வென்றியுள அவள் தனையுமவள்
விருப்பமுள[2]‘காலா’ தனைச்சேர்ப்பதும்.

(251) கண்டபடியிந்த வகைகளெல்லாம்
ஹறுமாம்பிசகன்றி இன்னமறி
தண்டிமுலைகுடி யால்ஹறுமாம்
சரடால்ஹறுமான பேர்களெல்லாம்.

---

1 மாமியார்   2 சிற்றன்னை; பெரியன்னை.

(252) குட்டமிருவகை தன்னைக்கொண்டும்
கோட்டிபைத்தியம் தன்னைக்கொண்டும்
வட்டமபமடை பட்டதாலும்
வடுவானபெண்ணைத் தட்டலாமே.

(253) மேலேயுரைத்திட்ட வடுவைக்கொண்டும்
மேவியடைபட்ட வகையைக்கொண்டும்
மோகமுளவுறுப் புசும்பலன்றி
மோசமணுகியே யிருந்ததாலும்.

(254) கோலமுளமண வாளன்தன்னை
குணமாய்ப்பிரிக்கவும் ஜாயிஸாகும்
ஏலும்மஹர்வைக்க நிக்காஹு தன்னில்
ஏற்றமுளஸுன்னத் தென அறிவாய்.

(255) மார்க்கம்தனில்ஸுன்னத் தானமஹர்
மவ்த்தால்துகூலின்பின் முழுதும்பூணும்
சேர்க்கைதுகூலின்முன் தலாக்குசொன்னால்
சேரும்மஹர்பாதி யென்றறிவாய்.

(256) கலியாணமெனும் துகூலுக்குப்பின்
கருதிவலீமாச்சோற் ஸுன்னத்தாகும்
வலீமத்தெனும்சோறு தனக்குப்போக
1‘உத்ற’ன்றிவாஜி பாகுமென்றார்.

(257) நாலுபெண்மூன்று ரண்டுபெண்தான்
நலமாயொருதன்கீழ் இருந்ததென்றால்
கோலம்பெற2‘கஸம்’ விதியெனவே
கோஜாமுஹம்மது கூறினரே.

(258) ஒருபெண்முறைதனில் ஒருபெண்வீட்டில்
உரமாய்அவன்போக ஜாயிஸல்ல
பெருத்ததங்கடம் உத்றுண்டாகில்
பிரிந்துஅவள்வீட்டில் புகஆமென்றார்.

---

1 தங்கடம் 2 கிஇ

(259) ஸபர்தனைநாடி எழுந்தாலவன்
தருமாய்க்கரைபோட்டு கரைவிழுந்த
ஸிபத்தாலறிந்திடும் .பெண்ணையவன்
சேர்ந்துஸபர்தனில் போவானென்ருர்.

(260) இத்தாக்காரர்க்கும் வழிப்படார்க்கும்
இந்தமுறைப்பாடு இல்லையென்றும்
வெற்றியுளகணக் கெழுநாளென்றும்
வேழ்ந்தமடந்தைக்கு திலுநாளென்ருர்.

(261) அடியாள்தனக்கிடை தனில்முறையாய்
அழகாய்நடப்பதும் ஸுன்னத்தாகும்
குடியாலொருகுடி தன்னிலிரு
கோதைதனைவைக்க ஹருமாமென்ருர்.

(262) சேர்க்கை அணுகாத துய்மைதன்னில்
செப்பும்தலாக்ஸுன்னத் தாகுமென்றும்
பார்க்கும்ஹைழிலும் சேர்க்கையிலும்
பகர்வதுபித்அத் தாகுமென்ருர்.

(263) நாட்டான்மகனுக்குத் தலாக்குமூன்று
நால்பாதிஅடி யாருக்கென்றும்
வேட்டமணுகாத குழந்தையர்கள்
விளம்புதலாகுரை வீழாதென்ருர்.

{ தலாக் குடைய பாடம்

(264) பைத்தியர்சொல்லும் தலாக்கதுவும்
பயந்தோர்சொல்லிடும் தலாக்கதுவும்
நித்திரைசெய்வோர் சொலும்தலாக்கும்
நெறியாய்விஷையமாய் ஆகாதென்ருர்.

(265) மறுபாஷைக்காரன் மஃனாதன்னை
வாகாயறியாமற் சொலும்தலாக்கும்
குறியாய்விழாதென்ருர் இஸ்பஹானி
குடியர்தலாக்குநன் ருய்விழுமே.

(266) மூன்றுமுறையன்றி தலாக்குரைத்த
மோசமணுகாத பேர்களுந்தான்
மீண்டுமவள்தனை இத்தாதனில்
மீட்டிக்கொள்வது துரிஸ்தாமென்றார். {மீட்டலின் பாடம்

(267) இத்தாதீர்ந்தாக்கால் அவனைநிக்காஹ்
ஏற்றமுடன்செய்ய ஹலாலாமென்றும்
பத்திபெறமூன்று தலாக்குபெற்ற
பாவைதனைக்கொள்ள ஹறாமாகுமே.

(268) வெற்றியுடன்பின்பு வாழ்க்கைப்பட்டு
விட்டாலவள்தனை பின்கொண்டவன்
சுற்றம்பெறஅவள் இத்தாதீர்ந்தால்
ஸிபத்தால்முதல்விட்டோன் கொள்ளலாமே.

(269) சத்தியம்செய்தால் உன்னுடனே
ஷஹ்வத்தால்கூடேனென அல்லது
[1]'முத்ததா'ய்நாலு மாத்தைக்கேற
முடுகேனெனச்சொன்ன மூளியவன். {பிரமாணத்துடைய பாடம்

(270) பத்திபெறமீழக் கூட்டவுமாம்
பரிவாகத்தெண்டம் அளித்தபின்பு
பத்தியுடனவள் தனை தலாக்கு
பகர்வான்மறுத்தால்பின் ஹாக்கிம்சொல்வான்.

(271) எந்தன் அன்னைபோ லேநீயென
எந்தனுடற்பிறந் தாள்போலென்றும்
அந்தமணுகாத சொல்லுரைத்து
அதன்பின்தலாக்குச்சொல் லாதிருந்தால். {ழிஹாருடைய பாடம்

(272) முந்தியுரைத்திட்ட தெண்டம்போலே
முஃமினும்பயல் தனையுரிமை
நந்தும்படிசெய்வான் அதுவில்லையால்
நலமாம்தொடர்நோன்பிரு மாதம்வைப்பான்.

---

1 காலம்

(273) இந்தவகைக்கும்ஏ லாதிருந்தால்
இருமுப்பதுபேர்க்கு சோறுஈவான்
அந்தவிதம்ஏழை கட்கோர்முத்து
அளிப்பான் அதுவரை மனையாள்ஹறாம்.

(274) பெண்ணைப்படுதூறு சொன்னோர்கள்மேல்
பூணும்எண்பது அடிதிடனாய்
உண்மையுளசாட்சி யீடேற்றினால்
ஊரமாய்லிஆன்செயி தாலும்வீழும்.

சத்திய சாபத்துடைய பாடம்

(275) வண்மையணுகாத லிஆனிட்டபின்
மாப்பிள்ளை தனக் கெக்காலமும்
தண்மையுளஹறாம் மாவாளென
சாற்றினார்ஞாயத் துக்திஸாரில்.

(276) கணவன்மவ்த்தான ஹுர்றத்துக்கு
கனமான இத்தா திங்கள்நாலும்
குணமானபத்து நாளும்இத்தா
கொண்ட[1]'அமத்து'க்கு அதின்பாதியே.

(277) சூலாயிருந்தாக்கால் இருவகைக்கும்
சூல்போனபோது இத்தாத்தீரும்
தாலம்தனில்தலாக் குடையஇத்தா
தகுமாய்அவருக்கும் சூலால்தீரும்.

(278) ஹைழுள்ள ஹுர்றத் தானவட்கு
கனதியுளத்தூய்மை மூன்றால்தீரும்
பைழாம்ஹைழுள்ள அடியாளுக்கு
பரிவாயிருதூய்மை யாலேதீரும்.

(279) அழுக்காம்ஹைழில்லா [2]'ஹுர்றத்'துக்கு
ஆகாதலாக்கித்தா மூன்றுமாதம்
இழுக்காம்அடியாட்கு ஹைழில்லையேல்
இருமாதமல்லது அவள்பாதியே.

---

1 வெள்ளாட்டி   2 அடிமையில்லாதவள்

(280) பொதுக்குவொருவடி யாளைமில்காய்
புரோசனம்கொள்ள ஹறுமவளை
தரிக்கவொருஹை ஹமுல்லதொரு
தங்குமொருமாதம் சென்றலாகும்.

{ இஸ்திப்ருவின் பாடம்

(281) சூலாயிருந்தாற்சூல் போகமட்டும்
துய்யபுரோசனம் கொள்ளஹறும்
சீலம்பெறநாயன் கீழிருந்து
சிறப்பாகப்பிள்ளை பெற்றவள்தான்.

(282) காலன்தனைக்கொண்டு நாயன்செத்தால்
கையாள்தனைப்போ[1]'லிஸ் திப்ரு'பார்ப்பாள்
கோலம்பெறதுகூல் செய்யப்பட்டு
குணமாயுரிமையா யினும்விதியாம்.

(283) வீடுகூடின வெள்ளாட்டியை
வெளியாயிஸ்திபு ருவுக்குமுன்
நாடிதஸ்வீஜு செய்யொண்ணாது
நல்லபடியதின் பிறகாகுமே.

(284) [2]'உம்முவலது'நா யன்மரித்தால்
உரிமைபெறுவாள்இஸ் திப்ருவிதி
தும்மஅவள்தனை விற்கிறதும்
சிறப்பாய்க்கொடுக்கவும் ஹறுமாகுமே.

(285) துகூலானஅமத் தானவள்தான்
துய்யவுரிமைபெற் றாளவள்மேல்
துகையாயுரைத்திட்ட இஸ்திபுரு
சூழுமெனச்சொன்னார் புகஹாக்களே.

(286) இத்தாவிருக்கின்ற வெள்ளாட்டியை
எந்தப்படிமில்காய் கையாடினல்
அத்தானபின்னர் அன்னவள்மேல்
அழகாம்இஸ்திபு ருபூணுமே.

---

[1] மாதத்திட்டு ஒருமுறை வந்து நீங்குதல் [2] நாயனுக்குப் பிறந்த பிள்ளையின் தாயான அடிமை.

(287) உம்முவலத்தான அடியாள் தன்னை
உரிமைவிடுத்துப்பின் நிக்காஹ்செய்ய
செம்மையுடன்நாடி நிக்காஹ்செய்தால்
செப்பமுளநாயன் தனக்காகுமே.

(288) ஆராகிலுமொரு தன் அமத்தை
அழகாய்நிக்காஹ்செய் திருந்துபிள்ளை
சீராகப்பெற்ற அவ்[1]'வலது'
சேரும்அவளுடை ஸெய்யிதுக்கே.

(289) சின்ன அடியாளைக் காபிராக
சேர்ந்த அமத்துடன் சேர்க்கை ஹறாம்
தன்னையறிந்துஇஸ் திப்றாபார்த்து
தகுமாய் அதன்பின்பு கூடலாமே.

(290) வரிசையுள்ள இஸ் லாமிலுள்ள
வல்லிதனைக்கொண்டு வீடுகூட
பெரியஹறாமாகும் நிக்காஹன்றியே
பேணிநிக்காஹ்செய் தால்ஹலாலாம்.

(291) ரண்டுதலாக்கொரு தலாகுபெற்றால்
நாரிதனக்குண்டும் நபகாக்குடில்
வென்றியுடன்மூன்று தலாக்குபெற்றால்
விருப்பமுள்ளசூல் இருந்தில்லையால்.

(292) ஒண்டும்குடிலெனும் ஸுக்னாவுண்டும்
உகப்பாகசூலுண் டாயிருந்தால்
ஒன்றுமபிசகன்றி குடில்ஸுக்னா
உகப்பாம்நபகாவும் விதியாமென்றார்.

(293) புருஷன்மவ்த்தான வல்லியர்கள்
பூணும்உடைமைகள் அலங்காரங்கள்
பிரிந்துஇருந்தவள் துக்கம்காத்து
பேணியிருப்பது பற்ழாகுமே.

{ இத்தா இருப்பவளின் இலக்ஷணங்கள் }

---

1 பிள்ளை

(294) இத்தா தன்னிலும் என்னேரமும்
இனிதாகபாலி கானபேர்க்கு
வெற்றியுடன்நாணி மறையவேண்டும்
மிஸ்கீன்எளியோர்கள் மேனிமூடி.

(295) எற்றும்கருமங்கள் தன்னைநாடி
இரவன்றிப்பகல் புறப்படுவார்
கற்றிப்பறைந்தாலும் ஹறுமைக்கொண்டு
காவலுளஇத்தா முறிந்திடாதே.

(296) தாலிப்பிடவைதான் போடமட்டும்
சங்கையுளமங்கி லிய்யம்தன்னை
கோலம்பெறகளத் தாதிருக்க
கொடியஹறுமான பித்அத்தாமே.

(297) வண்மையுளஇத்தா தீர்ந்தபின்பு
மறையவிதியாகும் வேதியர்கை
தண்மையுடன்தொட்டு ஸலாம்சொல்வது
சங்கையணுகாத ஹறுமாகுமே.

(298) ரண்டுவயதுக்கும் தாள்ந்திருக்கும்
நலமானபால கன்தனக்கு
வென்றியுடன்பிரி வாக அஞ்சு
முறையாகமுலை கொடுத்தாலவள்.

(பால்குடி யினுடைய பாடம்.)

(299) நன்றியுடன் அன்னை ஆவாளவள்
நலமானகண வன்பிதாவாம்
உன்றன்மகனுக்கும் அவள்பிள்ளைக்கும்
உ:கப்பானநஸப் மஹ்றமாமே.

(300) ஒருக்கால்கறந்தஞ்சு முறையேகிலும்
உண்ணும்பாலுடன் ஏதாகிலும்
தரிக்கக்கலந்தாலும் நசியம்விட்டால்
தையல்தனில்செத்த பெண்ணின்பாலை.

(301) இவன்தன்தம்பிக்கும் அண்ணனுக்கும்
இவளைக்கலியாணம் செய்யஹலால்
தவிழ்ந்துநடவுங்கள் மூலைகுடிப்பை
தரணிதனிலுள்ள மாந்தர்களே.

(302) புருஷன்தனைக்கொண்டு அழிந்தவட்கு
பூணும்நபக்காவின் வகையைக்கேளீர்
பரிவாய்யிருசிறங் கரிசிகறி
பிடவையும்வாஜி பாகுமென்றார்.

அன்ன வஸ்திரங்களின் பாடம்.

(303) நடுத்தரமான புருஷன்மேலே
நலமாயொருமுத்தும் அதிற்பாதியும்
கடிந்துபுசிக்கின்ற வகைக்கறியும்
கலியும்விதியிவன் கணக்காகவே.

(304) எளியபுருஷன்மேல் ஒருசிறங்கும்
இன்பமுளகறி யுங்கணக்காய்
கிழியும்பிடவையும் வாஜிபென
கீர்த்தியுளஅபூ ஷுஜாஉசொன்னார்.

(305) நசலாயிருந்தாலும் மவ்த்தாகிலும்
நாரிதனக்கிடும் புறச்செலவும்
பிசகன்றியிவை புருஷன்மேலே
பூணுமெதனச்சொன்னார் புகஹாக்களே.

(306) இந்தவகையான நபகாவுக்கு
எளிமைத்தனமாக இருந்தாணுகில்
நந்தும்படியவள் தனக்கவனை
நலமாய்விடுவிக்க ஜாயிஸென்றார்.

(307) இன்னமவளுக்கு விடுவிக்கலாம்
இனியதுகூலின்முன் மஹர்கொடுக்க
மின்னத்தெனும்பெல மில்லாவிட்டால்
மோசமறப்பின்பு விடுக்கொண்ணாதே.

(308) மேலானபிதா அன்னையரும்
மிடியாயிருந்தாலும் மஜ்னூனாலும்
ஏலாமைகொண்டு இருந்ததாலும்
இவன்மேல்நபகத்து விதியாமென்றார்.

(309) சிறுமைதனைக்கொண்டும் மிடிமைகொண்டும்
1'ஸிமானத்'துக்கொண்டும் மஜ்னூன்கொண்டும்
பெறுகேடானபிள்ளைகளுக்கும்
படிவாஜிபென்றார் இஸ்பஹானி.

(310) கைக்கீழகப்பட்ட அடியாருக்கும்
கத்தும்மிருகசாதிதனக்கும்
வைக்கும்நபகாக்கள் அளிப்பதுதான்
வாஜிபெனச்சொன்னார் அபூஷுஜாஉ.

(311) ஏலாதவேலை பூட்டஹறும்
ஏன்றவேலைகள் கொள்ளவாகும்
ஆலம்தனிலடி யார்கள்தன்னை
அழகாய்நடத்தார்க்கு அழலாகுமே.

(312) பெண்சாதிவிட்டுப் பிரிந்தாலவன்
பிள்ளைவளர்ப்பது ஹக்கவட்காம்
வஞ்சமறவேழு வயதளவும்
வளர்ப்பாளவள்பின்பு பொருத்தமுண்டே.

(313) நாட்டான்மகளுமாய் புத்தியுமாய்
நலமானமார்க்க காரியுமாய்
வேட்டமணுகிய பத்தினியாய்
விசுவாசியுள்ள ஊராளியாய்

(314) நாட்டமணுகிய புருஷனன்றி
நலமாயிருப்பதும் வளர்ப்பதற்கு
வாட்டமணுகாத ஷற்தெனவே
வழுத்தினார்நாயத் துக்திஸாரில்.

---

1 இயலாமை

(315) கொல்லுமெனத்தக்க ஏத்திரத்தால்
கொல்லமனம்வைத்து *கொன்றதினால் } *கொலைகளுடைய பாடம்.
நல்லபடியவன் தனையஃதால்
நலமாகக்கொல்ல விதியாமென்றார்.

(316) செத்துமரித்தோனின் வலியானவர்
[1]'தியத்து'மேல்மனம் பொறுத்தார்களால்
வெற்றியுடன்கொலை செய்தவன்மேல்
மேலானதெண்டம் பூணுமென்றார்.

(317) கையின்பிசகது வந்ததாகில்
கவ்தில்லை தியத்தில் தெண்டம்பூணும்
பையத்திலுவாண்டில் இவனினத்தால்
பரிவாக அதை யிறுப்பார்களே.

(318) வதைக்கமாட்டாத ஏத்திரத்தால்
மணமாகநாடி ·செய்திருந்தால்
கதிக்கப்பெறும்தெண்டம் இவன்மேல்விதி
கவ்தெனும்பழி யில்லையென்றார்.

(319) பாலிகாகாத சிறியவர்தான்
வதைத்தாலொருவரைப் பழிபூணாது
கோலமுளமஜ் னூன்கொண்டாலும்
கூடாது[2]'கிஸா ஸெ'னவுரைத்தார்.

(320) ஆணாய்ப்பிறந்தவன் தியத்தாவது
அழகான நூறு ஒட்டகமாம்
நாணும்வனிதையின் தியத்தாவது
நலமாக அதின் பாதியென்றார்.

(321) யஹூதிநஸ்றானி தியத்தாவது
இனியமுஸ்லிமின் மூன்றிலொன்றும்
ஆகாமஜூஸிகள் தியத்தாவது
ஆறுபாதியில் ஒருபங்காமே.

1 வரி, கப்பம், 2 பழிக்குப்பழி

(322) பிள்ளை தனக்காக தகப்பனையும்
பெருகும்அடிமைக்காய் ஹுர்றத்தையும்
கள்ளத்தனமான காபிருக்காய்
கன திமுஸ்லிமை கொல்லொண்ணாதே.

(323) ஒருத்தனைப்பெருங் கூட்டமாக
ஒருமித்துக்கூடி கொலைசெய்தாக்கால்
பரிவாய்அவர்களை அவனுக்காக
பழீஹத்தாய்க்கொல்ல விதியாமென்றார்.

(324) ஒருதன்ஒருதன்மேல் வழக்காடினால்
உகப்பானஎந்தன் தந்தையரை
கருவிதனைக்கொண்டு கொன்றானென்றால்
1‘கப்ஸீனை’மிஞ்சி தியத்துண்டாமே.

(325) சருவித்தொடுத்தவன் செய்தில்லையால்
சத்தியம்அஞ்சு பத்துமுறை
கருதிமறுதலைக் காரன்செய்து
கடத்திக்கொடுபோவர்ன் தியத்தில்லையே,

(326) கொல்லஹறாமான சரீரங்களை
கொலைசெய்தோர்மேல்‘கப் பா’றத்துண்டாம்
நல்லமுஸ்லிமை உரிமைசெய்வான்
நாடியிதுசெய்ய பெலமில்லையால்.

(328) அல்லில்கருத்துவைத் திருதிங்களாய்
அழகாய்தொடர்நோன்பு வைக்கவேணும்
வல்லபெரியவன் ஹக்காமிது
மனிதருடஹக்கு திய்யத்தாமே.

(329) நாட்டான்மகனுமாய் ஆகிலுமாய்
நலமாய்நிக்காஹது செய்தவனாய்
வேட்டமுடனிந்தப் படியிருப்போன்
விழுந்தால்ஜினாதனில் அவன்ஹத்துகேள்.

{ விபச்சாரத் தண்டனையின் பாடம் }

1 ஐம்பது

(329) நாட்டியவன் தனைக் கல்லுகொண்டு
நலமாய்எறிந்து தான் கொல்லவேணும்
இட்டம்புறப்படும் பின்புறத்தில்
செய்தாலும்றஜ்ம் விதியாமென்றார்.

(330) துரிஸாய்நிக்காஹறா செய் யாதவர்கள்
துன்மார்க்கஜினாச் செய்தால்ஹத்து
பரிவாய்ஒருநூறு அடிஅடித்து
புறத்திலொருஆண்டு நீக்கவேணும்.

(331) அடியார்தனக்குள்ள ஹத்தாவது
அழகானநாட்டான் மக்களுட
அடியால்பாதியும் அறுமாதமும்
அவ்வூர்தனைவிட்டு வோட்டவேணும்.

(332) சிறியார்பைத்தியர் அதனைச்செய்தால்
சினமாகக்கட்டி உறுக்கல்செய்து
குறையசிலஅடி அதபாகவே
குணமாய் அடித்திட ஜாயிஸென்றார்.

(333) திட்டம்புறப்படும் அதிற்செய்தலும்
திங்காய்மிருகத்திற் செய்யிறதும்
வேட்டமணுகாத ஜினாச்செயலில்
வினையும்ஹறாக்கும்போலே யிருக்குமென்றார்.

(334) தண்மையுளயிரு துனையாலன்றி
தாண்டசெயல்செய்த பேர்கள்தம்மை
செம்மையுடன்நாற்ப தடியடிக்க
சிமைத்தலைவன்மேல் கடனமென்றார்.

(335) பாலிகாய்ஹறார்றாய் பத்தினியாய்
வண்மைமுஸ்லிமா யிருப்பவனை
வாலிதெனும்பாவா வில்லானுமாய்
வாகாய்பாலிகாய் ஆகிலானேன்.

(336) சீலம்பெறச்சொன்னால் ஜினாவைக்கொண்டு
செப்பமுடன்நாலு சாட்சியன்றி
நாலுஇருபது அடிவிதியாம்
நலமாயவன்பொறுத் தால்விழுமே.

(337) மஸ்துவருத்துற நீர்குடித்தால்
வாஜிப்ஹறா்றுமேல் நாற்பதடி
வஸ்தாமடிமைமேல் பாதியென்றும்
வாய்நாற்றம்[1]'கைஆல்' பூணுதென்றார்.

(338) புத்தியுடன்பாலி கானவனாய்
பேணுமுடைமையில் தீனாறுகால்
பத்திக்களவுசெய் தாலவன்மேல்
பரிமாறும்வலக் கரம்தறியாம்.

{ திருட்டுத் தண்டனையின் பாடம்

(339) வெற்றியுடன்பின் களவுசெய்தால்
மீழும் அவனிடக் கரம்தறியாம்
சுத்தியுடன்செய்தால் இடக்காலையும்
சாத்தும்பின்செய்தால் வலக்காலாமே.

(340) வழியில்கொலைசெய்து கொள்ளையாடி
வன்மையணுகாமல் இருப்போர்களை
பழியாய்க்கொலைசெய்து கழுவிலேற்ற
பதியாழும்பேர்கள் மேல்விதியாம்.

(341) கொலையன்றிகொள்ளை யெடுத்தோர்களை
கொல்லவிதியல்ல கணைக்கால்மாறி
பழீஹத்துளபங்கம் வருத்திடவும்
பதியாளும்மன்னன் மேல்பற்ழாம்.

(342) கொள்ளையுமன்றிக் கொலையுமன்றி
கொச்சைப்படுத்துற பேர்கள்தம்மை
துள்ளித்துடித்திட அடித்திடவும்
துரவம்தனில்போட வும்ஆமென்றார்.

---

1 வாக்கு

(343) உடலை அடிமையை பெண்சாதியை
உன்னிவினைசெய்ய வருவோர்களை
மடியாதவன்கொலை அவனைச்செய்தால்
வன்மையுளகொலை ஆகுமென்றார்.

(344) மிருகசாதிகள் இரவுதன்னில்
வினைசெய்தால்பூணு முடையவன்மேல்
திறமாய்த்தளைந்திட வாஜிபாகும்
சேருமிரவையில் உரமாகவே.

{ மிருகங்கள் சேதப் படுத்தலின் பாடம்

(345) வாயல்திறந்திருந் தாலதிலே
மாடாடுபுகுந் தழித்தாற்பகல்
தூயபடிபூணு தவன்மேல்தெண்டம்
துறந்ததில்விட்டால் ழமானில்லையே.

(346) ஹிர்ரத்தெனும்பூனை தனைவளர்த்தால்
கேடாகவொரு வஸ்துக்களை,
ஷர்ருயெடுத்தின்கில் [1]'லைலில்'கட்ட
சாமந்தனிலிவை செய்தால்பூணும்.

(347) முஸ்லிமாய்பாலிங் ஆகிலாகி
மோசமணுகாஹூர் ருய்[2]'தகரு'ய்
நஷலாளியல்லா தாகத்துண்டாய்
நல்லபிதாஅன்னை விடையுமுண்டாய்.

{ யுத்தத்தின் பாடம்

(348) நஜ்மாம்கெடுவன்றி தைனிலுள்ளான்
நலமாம்கடனாளி உகயமாகில்
வசையாமிவையில்லான் அவன்தன்மேலே
வாஜிபாம்ஜிஹாத் பீஸபீலே.

(349) வன்மையுளஜிஹா தெனுமறிவும்
மைய்யித்தைகுளிப் பாட்டுதலும்
செம்மைதப்னும்நல் தொழுவிப்பதும்
சிறப்பாம்விலாயத்துக் கிருப்பதுவும்.

---

1 இரவு 2 ஆண்

(350) தண்மையுரியானுக் கலையீவதும்
[1]ஸாயிலு'க்கன்ன மளிப்பதுவும்
உண்மையுளசாட்சி யுரைப்பதுவும்
உகந்துஸலாமுக்குத் தாரம்செப்பும்.

(351) தும்மல்தனக்குஅல் ஹம்துரையே
சொன்னமுஸ்லிமுக் கெதிர்மொழியாய்
தும்மயர்ஹமுக் கல்லாஹ்வென
சொல்வதும்விதி கிபாயத்தென்றூர்.

(352) தண்மையுளகாபிர் இஸ்லாமுக்கு
தகுமாயிருபங்கு தன்னைவிட்டு
உண்மையுடனேறக் கண்டதானல்
ஓடிஅகன்றிட ஜாயிஸாமே.

(353) சிறியர்தனைப்பெண்ணைப் பிறந்தவளை
ஜிஹாதில்கொலைசெய்ய ஜாயிஸில்லை
அறிவாம்குருக்களை கிழவர்தன்னை
அமர்க்களத்தினில் கொலைஜாயிஸாம்.

(354) பாலிகானோரைக் கதல்செய்யவும்
வடுவாம்அடிமையாய் வைத்திடவும்
கோலம்பெறச்சும்மா விட்டிடவும்
கொடையாம்திரைவாங்கி விட்டிடவும்.

(355) ஆலம்தனிற்சீமை ஆளுகின்ற
அரசன்தனக்கதில் பொருத்தமான
நாலுகருமத்தில் எதுசெய்தாலும்
நல்லபடிஜாயி ஸாகுமென்றூர்.

(356) சிறைவாரமுந்தி தீனில்வந்தால்
'தம்'சோரைமுதல் பிள்ளைகுட்டி
திறமாய்க்காவலாம் எனவுரைத்தார்
ஷெய்குஅபூஷுஜாஃ இஸ்பஹானி.

---

1 யாசகன்

(357) தந்தையாகிலும் தாயாகிலும்
சங்கையில்லாமில் வந்தாராகில்
சிந்தைமகிழ்ந்திடும் குழந்தையரும்
சிறப்பாம்இல்லாமென் றுரைக்கலாமே.

(358) குழந்தையர் தன்னை முஸ்லிமானோன்
கொள்ளைச்சிறையாகப் பிடித்தானென்கில்
தெழிந்தஇஸ்லாமாய்க் குழந்தையரும்
சீராயிருக்குமென் றூர்காழியார்.

(359) இஸ்லாம்நகர் தனில் எறிபிள்ளையாய்
எடுத்தகுமாரனும் இஸ்லாமென்றும்
பிசகன்றிஹுக்கும் செய்யப்படும்
பேணுமிவையன்றி காபிரான

(360) பசளை தனை இஸ் லாமெனவே
பரிவாய்ஹுக்ம்செய்ய புலூகுக்குமுன்
நஸீஹத்துரைபேசும் இமாம்ஷாபியீ
நல்லபடிஆகா தெனநவின்றூர்.

(361) தொழுதாலும்நோன்பு பிடித்தாலுமாம்
சிறப்பாம்குர்ஆனை யோதுகிலும்
தெளிவாம்புலூகுக்கு முன்காபிராம்
சிறியார்இஸ்லாமில் ஆகமாட்டார்.

(362) அச்சப்பாடன்றி வருமுடைமை
அழகானபைத்தம் வெட்டிக்குத்தி
கொச்சைப்படுத்திவாங் கும்முடைமை
கனீமத்தெனும்கொள்ளை முதலாகுமே.

(363) கொலையில்விழுந்தவன் உயிருடைமை
கொன்றமனிதருக் காயிருக்கும்
அலைபானிவ்விதம் சொன்னூரென
அருளினூர்நல்ல வுலமாக்களே.

(364) கொள்ளையுடைமையில் 1'குமுஸெ'டுத்து
கும்ஸுதனை ஐந்து பங்குவைத்து
வள்ளலெனும்நாயன் தனக்குமவன்
வண்மைறஸுலுக்கு மொருபங்காமே.

(365) இந்தவகைபங்கு இமாம்கையிலே
இருக்குமவர்முஸ் லீம்களுட
அந்தமுளகரு மம்தனிலே
அளிப்பார்வகைப்படி திறமாகவே.

(366) ஹாஷிம்கிளையார்க்கும் முத்தலிபி
கருணைகிளையார்க்கு மொருபங்குண்டாம்
மோசமறவொரு பங்காவது
முஸ்லிம்எதீம்களில் எளியார்க்குண்டே.

(367) எளியமிஸ்கீன்கள் தனக்கோர்பங்கு
ஏகிவழிநடப் போர்க்கோர்பங்கு
தெளிவாயிவைதனை அளித்தபின்பு
சேவகர்ஸுல்தான் பிரிப்பார்களே.

(368) பாரிஸெனும்பரிக் காரனுக்கு
பரிவாய்த்திலுபங்கு காலாளுக்கு
சீரிதாயொரு பங்குமாக
செம்மல்நெறியாகப் பங்களிப்பார்.

(369) பரியன்றியுள வாகனத்தில்
பரிவாயிருந்துபோர் செய்வோருக்கு
கருதிநடக்கின்ற காலாள்பங்கு
ஹாக்கிமெனும்ஸுல்தான் அளித்திடுவார்.

(370) இணங்கிதிரைவாங்க ஜாயிஸில்லை
இழிவானபுத்காணி ஜிந்தீகுபால்
பிணங்கிபடையினல் கொள்ளையிட்டு
பிடுங்கும்வகையாலும் தின்னலாமே.

---

1 ஐந்திலொன்று

(371) தவ்ஸீருவெனும் கிதாபுதன்னில்
சங்கையிமாம்அபூ ஹனீபாவென்போர்
கவ்லாயுரைத்திட்டார் ஹர்பிமாலை
கண்டஅபாயத்தால் எடுக்கலாமென்

(372) றவர்தன்மகன்இமாம் அபுல்மஆலித்
தஹிலிக்நம்மவர் தில்மீதுவும்
மவ்லாஅருள்பெற்ற கஜ்ஜாலியும்
வண்மையுடனுமென் றுரைத்தார்களே.

(373) அவ்வல்இமாம்அபூ ஹனீபாசொன்னூர்
ஆகாஹர்பியின் உடைமைதன்னை
அவ்வியெடுக்கலாம் எப்படியும்
ஆகா[1]'ரிபா'க்கொண்டும் ஆகுமென்றூர்.

(374) யஹூதிநஸ்ருனி தன்னையன்றி
இழிவானகாபிர் தங்களெல்லாம்
தகுதியணுகாத ஹர்பியாகும்
சாற்றவகையில்லை திம்மியென்றே.

(375) நஸ்ருனிபக்கல் யஹூதிபக்கல்
காற்றமுளஸாபி யீஸாமிரீ
பிசகன்றியொற்று விருந்தார்களாய்
பேணித்திரைவாங்க இணங்கலாமே.

(376) திரைகட்டிவழிப் பட்டிருந்தால்
திம்மியெனச்சொல்லப் படுமிவரை
குறிகேடணுகிய புத்துவைத்து
கும்பிட்டோர்திம்மி அல்லவென்றூர்.

(377) பயல்மேல்சிறுவர்மேல் பைத்தியர்மேல்
பாவைமேல்[2]'குன்தா' மேல்பகுதி
தியத்துவிதியல்ல திரையாவது
சேரும்வருஷத்திற் கொருதீனாரும்.

1 வட்டி 2 இல்லி

(378) இஸ்லாம்பகுதியில் திம்மிகளை
எறும்வாகனம் தனிலேறவும்
குஷியாய்க்1‘கனிசா’க்கள் எடுத்திடவும்
கொடியவிலக்காக தவிர்க்கவேணும்.

(379) அறுக்கஇடமான மிருகங்களில்
அறுக்கவிதியாகும் 2‘ஹுல்கூ’ம்மறி
முறிக்கவிதியல்லை நரம்பானதை
முறித்தால்நரம்பென மறுப்பாமென்றார்.

வேட்டை அறுப்புப் பாடம்.

(380) ஏலாதிருந்தாக்கால் எவ்விதமும்
ஏன்றபடியறுத் தால்ஹலாலாம்
கோலமழகான இஸ்பஹானி
கூறினார்நாயத் துக்திஸாரில்.

(381) எலும்பன்றிநகம் பல்லுமன்றி
ஈரலினமன்றி தேசுள்ளதால்
வலிமைஷற்துடன் அறுபட்டது
மகிழ்ந்துஹலாலாகத் தின்னலாமே.

(382) கிப்லாதனைமாறி அறுத்தாலுமாம்
கீழாம்திசைகொண்டு அறுத்தாலுமாம்
புவியில்தலைவிள அறுத்தாலுமாம்
போற்றலுள்ளஹலால் அருந்தலாமே.

(383) தலையற்றுப்போனால் கத்திதன்னை
தறையிலெறிவது பித்அத்தாகும்
நிலையிலிருப்பினில் ஒருதனாக
நெறியாயறுக்கிலும் ஹலாலாகுமே.

(384) யஹூதிநஸ்ரானி யானவர்கள்
இந்தஷற்தோடு அறுத்தார்களேல்
ஹலாலதைத்தின்ன ஜாயிஸாகும்
ஆதிகுருனாயத் ததிலுமுண்டே.

1 கோயில் 2 குரல்வளை

(385) பெண்ணாய்ப்பிறந்தவள் அறுத்தாலுமாம்
பிள்ளையடியார்கள் அறுத்தாலுமாம்
நன்றாம்படியறுத் தாலதனை
நாடிப்புசித்திட ஹலாலாகுமே.

(386) தொழுகையிழந்தோர்கள் ஜகாதுவிட்டோர்
தோசபித்அத்துச் செய்வோர்கள்தான்
தெளிவாய்ஷற்துடன் அறுத்தாலுமாம்
தின்னமக்றூஹாம் திடனாகவே.

(387) நாய்போலல்லது ராஜாளிபோல்
நன்றாய்வேட்டையில் சென்றுஅது
துய்யமுஸ்லிம்கள் அனுபவித்து
தின்னும்ஹயவானைப் பிடித்துவந்தால்.

(388) நாயினோடிவன் அறுத்துக்கொள்வான்
நலமாய்அதுஹயாத் தாயிருந்தால்
காயம்தனைக்கொண்டு ஹயாத்தழிந்தால்
ஹலாலாவிருக்குமென் றூர்கிதாபில்.

(389) செத்தவகைதனில் ரண்டுவஸ்து
தின்னஹலாலாகும் 1'மீன்கிளி'யும்
வெற்றியுடனிந்த வகைகளெல்லாம்
விரும்பிஅறிந்தபின் னருந்துவாயே

(390) வயிற்றிலுளகுட்டிக் கருப்பாவது
வாகாயதின்தாயை அறுப்பதாகும்
மைத்தில்லாதிருந் தாலதையும்
வாகாயறுத்திட ஹலாலாமென்றார்,

(391) அஸ்லாம்அறபிகள் மணமாய்க்காணும்
அழகாமிருகமெல் லாம்ஹலாலாம்
குஷியாகஅவர்கள் காணத்தது
குறிகேடனாகிய ஹறாமாமென்றார்.

---

1 வெட்டுக்கிளி

(392) ஆமென்றுஆகா தென்றுமார்க்கம்
அழகாய்க்கொடுவார ஹயவான்தனில்
சீமைஅறபினில் உள்ளோர்மனம்
சேராதெனச்சொன்னார் இஸ்பஹானீ.

(393) துட்டமிருகத்தால் சிங்கப்பல்லு
சேர்ந்துஇருக்கின்ற மிருகம்ஹறாம்
கெட்டநகத்தினால் கூற்படுத்தும்
கேடாம்பறவையும் ஹறாமாகுமே.

(394) தங்கடப்பட்ட பேர்களுக்கு
சங்கையணுகாத செத்ததெல்லாம்
பங்கப்படும்ஆவி அடையமட்டும்
பரிவாகத்தின்ன ஜாயிஸென்றார்.

(395) உழ்ஹியாஸுன்னத் தாம்ஒட்டகம்
உகப்பாம்பசுஏழு பேர்க்குப்போதும்
ஸலீமத்தாய்ஐ பல்லாத்ததால்
சாற்றுவதும்ஷற் தாகுமென்றார்.

உழ்ஹிய்யா வின் பாடம்

(396) மறிப்புமறிந்ததும் குஸிய்யானதும்
வண்மைஉழ்ஹிய்யா தன்னிலாகும்
விருப்பமுளதஷ் றீகளவும்
மேலானகுற்பான் ஜாயிஸென்றார்.

(397) பிள்ளைபிறந்தவ ழாம்நாளையில்
பேணிஅகீகத்துச் செயஸுன்னத்தாம்
வள்ளலிப்னுக்கு ரண்டுஆடும்
மடந்தைதனக்கொரு ஆடுமென்றார்.

அகீகா வின் பாடம்

(398) ஏறுவாகனத் திசலுதலும்
எறியும்அம்புகொண் டிசலுதலும்
வேறாயிசலியெய் தாலும்வாங்க
விருப்பமுளஹலா லாகுமென்றார்.

அம்பு எய்தலின் பாடம்

(399) படையேத்திரங்களால் இசலுவதும்
பாங்காகஹலா லாகுமென்றும்
நடையாலோட்டத்தால் இசலுவதும்
நல்லஹலாலாக இருக்குமென்றார்.

(400) ஆதியிஸ்மன்றி ஸிபத்தையன்றி
ஆணைசத்தியம் துரிஸ்தாகாது
ஓதியுரைத்திடும் வீஞாணையால்
ஒருவஸ்துமில்லை யெனவுரைத்தார்.

{ பிரமாணம் நேர்ச்சையின் பாடம்

(401) சத்தியமறுத் தாலதுக்கு
சங்கையுளதெண்டம் அதனைக்கேளீர்
வெறறிமுஸ்லிமை உரிமைவிட
வேணுமதுக்கவன் பெலமில்லையால்.

{ தீர்ப்பு சாக்ஷியத்தின் பாடம்

(402) முத்தால்பலமுத்து எளியார்க்கீவான்
முன்னத்தெனும்பெலம் இல்லாவிட்டால்
பத்துப்பேர்க்காடை அளிப்பான் அல்லாய்
பாங்காய்த்திலுநோன்பு பிடிப்பானென்றார்.

(403) நேர்ந்தால்நிறைவேற்ற வாஜிபாகும்
நெறியானநன்மை யாயிருந்தால்
வாந்தமுளமுபா ஹானதைத்தான்
மறுத்துவிடநேர ஆகாதென்றார்.

(404) முஸ்லிமாய்பாலிங் ஹுர்றுமாகி
[1]‘முதக்கரு’ய் ஆகில் [2]‘ஆதில்’ாகி
பிசகில்லாவேதம் தன்னிலுள்ள
பிரிவாம்ஹுக்மையும் அறிந்தவராய்.

(405) குஷியாம்நபியுல்லாஹ் ஸுன்னத்தையும்
குணமாகப்பேணி அறிந்தவராய்
அஸ்ஹாபிமார்கள் நடபடியும்
அழகாய்நடந்தவன் காழியாமே.

1 ஆடவர் 2 நீதியுள்ளவன்

(406) மார்க்கஹு¬க்மிலே யிக்திலாபின்
வழிப்பாடறியவும் அறபிய்யத்தின்
காக்கும்வழிப்பாடு அறியவேணும்
கண்காதுள்ளவ ஞகவேணும்.

(407) வாக்காம்உரைபேச சக்திவேணும்
வண்மையுளஇந்தக் குணங்களும்தான்
ஊர்க்குகழாசெய்யும் காழியாக
உற்றபர்ழில்கி பாயத்தாமே.

(408) வழக்காளியான இருவரையும்
வாகாய்சரிவைக்க வும்அவர்கள்
இழுக்காம்ஹத்யாவை கையேற்காமல்
இருக்குமதுகாழி மேல்வாஜிபாம்.

(409) கடிந்தகோபத்தில் பசிவிடாயில்
கடந்தசலிப்பிலும் சமாளத்திலும்
தொடர்ந்தஷஹ்வத்தில் வசைகேட்டினில்
துக்கமிகுத்தாலும் கேட்கொண்ணுதே.

(410) சிறுநீர்பெருநீர்வந் தெதிர்த்தபோதும்
சிறப்பாய்விழிதூக்கம் மிகுந்ததாலும்
வரும்குளிர்சூடு மிகுந்ததாலும்
வாகாய்ஹு¬க்கும்செய்ய விலக்காகுமே.

(411) பள்ளிதனிலிருந் தெவர்வழக்கும்
பாங்காகக்கேட்க மக்ரூஹாகும்
மெள்ளநடுவூரில் வந்திருந்து
வேதத்தொழுங்காக வழக்குத்தீர்ப்பாய்.

(412) மறித்துவெதிர்சொல்ல கேட்டபின்பு
வாகாய்மறுதலை வழக்காளியை
குறித்துஅவன்தனை பின்புகேட்டு
குருனின்படிதீர்த்து அனுப்பிவைப்பாய்.

(413) உண்டென் றுரைப்போனே சாக்ஷிகேட்பாய்
உன்னியுரைப்போனே யில்லையென் று
வென்றியுளநல்ல சத்தியமாய்
விள்ளுவாயென் று வுரைத்திடுவாய்.

(414) மார்க்கநெறியன்றி வழக்குரைப்போன்
வல்லோன் தனக்கவர் பாவியாவார்
ஏற்கும்படிசாட்சி யுடனறிந்து
இதமாய்த்தீர்க்காதார் அழலிலாவார்.

(415) ஆதியிறக்கின குருனின்படி
அழகாய்வழச்குத்தீ ராதபேர்கள்
நீதமணுகாத காபிரென் று
நீதிகுற்ஆனில் நிகழ்த்தினனே.

(416) உந்தன்மகளையான் கொள்ளவென் று
உறுதிமிகச்சொல்லிப் பணமும்வாங்கி
பின்புஉத்றன்றி மறுத்தானுகில்
பேசப்படுமவன் முனுபிக்கென்றே.

(417) கொடுத்தவுடமைக்கு அதிகம்வாங்க
கொடியஹறுமாகும் அதிகம்தீர்ப்போர்
படிக்கும்குர்ஆனுக் கீமான்கொள்ளா
பழீஹத்தணுகிய காபிரென்ருர்.

(418) கச்சவடத்திலுண் டாங்கருமம்
கத்தன்குர்ஆனில் நபிஸுன்னத்தில்
கச்சமுறையாக இல்லையென்போர்
காபிர்தனில்கெட்ட காபிர்களே.

(419) இந்தவழக்குகள் வேதம்தன்னில்
இல்லையெனவுரைப் போர்களெல்லாம்
அந்தமுளவேதம் அதுதனக்கு
அன்பாகாமான் கொள்ளார்களாம்.

(420) காழிதனத்திலுண் டாம்கருமம்
ஹதீதானமாலை தனிற்சிறுக
ஆலிம்ஸுலைமான் மகன்ஸாமென்போன்
ஆதியுதவியால் சொல்லலுற்றேன்.

(421) நெறியாய்இஸ்லாமாய் பாலிகுமாய்
நீண்டஅக்லுண்டாய் ஹுர்றிய்யத்தாய்
குறையாதிவையெல்லா முள்ளோனன்றி
கூடாதுசாட்சிக் கெனவுரைத்தார்.

(422) நெறியாவதுகேளாய் பெரும்பாவத்தை
நிகழ்ந்தசிறுபாவம் தனிலிராமல்
முறையாம்வழிப்பாட்டில் இருக்கின்றவன்
1'முறுவ்வத்'துளநெறி காரணமே.

(423) ஆகாஜிணவுக்கு சாட்சிநாலும்
அமளியுளஹத்துண் டானவையில்
வாகாயிருசாக்கி யும்றமழான்
வரிசைப்பிறைக்கொரு சாக்கியுமாம்.

(424) முதலோடுசேர்ந்த காரியத்தில்
மொடுவாயொருஆணு மிருபெண்களும்
துய்தாயொருதனும் சத்தியமும்
துரிஸ்தாகுமுதல் காரியத்தில்.

(425) நெறியாகவிரு ஆண்பிறந்தோன்
நிக்காஹெனும்கரு மம்தனக்கு
சரியாகவேணும் இல்லாவிட்டால்
ஜிணக்குநிகரான நிகாஹாகுமே.

(426) ஆணய்ப்பிறந்தவன் முவக்கல்செய்து
அம்ரும்கருமத்தில் நாலுமங்கை
பேணியுரைத்திட்டால் ஒன்றுபோலே
பிரியாதுஅந்தக் கருமம்கூடும்.

---

1 ரோஷம்

(427) தனக்குபுரோசனம் சாக்கிகொண்டு
தகுமாயல்லது தங்கடத்தை
மனதிலச்சம்வைத் துரைப்போர்சாட்சி
வாகாய்கபூல்செய்ய துரிஸ்தல்லவே.

(428) ஷற்தின்படியேதன் அடியார்களை
சங்கையுரிமைசெய் தாலவர்க்கு
ஹுற்மதுளஹுர்றின் ஹுக்ம்களெல்லாம்
கூடுமெனபுக ஹாக்கள்சொன்னார்.

{ அடிமை உரிமை விடுவதின் பாடம்

(429) எதுவுமிதுகளில் உரிமையென்றால்
ஏறுமுரிமையெல் லாத்திலையும்
பொதுவாயிருப்போனை யொருவனிட்டால்
பாதியுரிமையாம் பதிவாகவே.

(430) விலாயாவெனும்வலீ தலமாவது
உரிமைவிடுத்தவன் ஹக்கிலாகும்
பலாயாய்மவ்த்தாகில் உரிமையிட்டோன்
வங்கிசம்தன்னில் செல்லுமென்றார்.

(431) உரிமையுளோன்தனை விற்பதுவும்
உகப்பாய்க்கொடுக்கவும் ஜாயிஸில்லை
கருணையுளவும்மு வலதானவள்
கருதியுடையதாய் உரிமைகொள்வாள்.

(432) முதப்பறெனும்பயல் நாயன்செத்தால்
மோசமறஅவன் உரிமையாவான்
கதிக்கும்பயல்ஹுக்ம் அவனுக்குண்டும்
ஹயாத்தாலவனாயன் இருக்கும்மட்டே.

(433) நாயன்தனக்குவெள் ளாட்டிபிள்ளை
நலமாகப்பெற்றா லவளையவன்
தாயபடிஹிபத் தளித்திடவும்
துரிஸ்தல்லைவிலை விற்பதுமே.

(434) நாயன்மவ்த்தாலுல் உரிமையாவாள்
நல்ல[1]'றம்ஃஸ்மால்' தன்னில்நின்றும்
தூயபெரியவன் ஹம்துகொண்டு
சுருக்கமுளநாயத் துரைமுகித்தேன்.

(435) வரிசைமிகவுள்ள அபூஷுஜாஉ
வண்மைஅஹ்மது ஹஸன்மகனர்
பரிவாயுரைத்திட்ட கிதாபுதன்னை
பையலுரைத்திட்டேன் பதியுள்ளோர்க்கே.

(436) ஷெய்குஅபூஷுஜாஃ அவருடைய
ஷறபாம்கப்றறை தனிற்கருணை
மேகம்சொரிவாக நின்றுபெய்ய
விண்ணேழ்அமைத்தோனே துணைச்செய்வாயே.

---

1 தலைமுறை

முற்றிற்று.

முன்னேற்றம் பிரஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

முன்னேற்றம் பிரஸ்
ரூலிங் & புக் பைண்டிங் ஒர்க்ஸ்,
திருநெல்வேலி ஜங்ஷன்.